பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 01 செவ்வாய்க்கிழமை (15.06.2004) தொலைபேசி - 2223378 ஒலி 179

# நவீனரக விமானம் தாங்கிக் கப்பல்

# அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு

## கடற்படை அதிகாரிகள் குழு அடுத்தவாரம் அமெரிக்கா பயணமாகிறது

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்காவிடம் இருந்து நவீன ரக விமானம் தாங்கிப் போர்க் கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

பல மில்லியன் டொலர் பெறுமதியான 'என்கரேஜ்' எனப்பெயரிடப்பட்டுள்ள இக்கப்பலை நீண்டகாலக் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடற்படையை நவீன மயப்படுத்தவும் கடற்பாதுகாப்பைப் பலப்படுத்தவுமே இவ் நவீனரகப் போர்க் கப்பலைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலைக் கொள்வனவு செய்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அனைத்தும் முற்றுப் பெற்றுவிட்டன. 70 பேர் பணியாற்றக் கூடிய இக் கப்பலில் ஹெலிஹொப்டர்கள் இரண்டை நிறுத்தி வைக்கக் கூடிய இறங்கு தளமும் உள்ளது. மேலும் தூர இலக்குகளைக் குறிவைக்கக் கூடிய நவீன ரக ஆயுதங்களும் கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன.

கப்பலைக் கொள்வனவு செய்யும் பணிகளை முடுக்கிவிடும் பொருட்டு கடற்படை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று அடுத்த வாரம் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளது. அங்கு செல்லும் கடற்படை அதிகாரிகள் கப்பலைக் கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர் எனத் தெரியவருகிறது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த மாத ஆரம்பத்தில் அமெரிக்காவுக்குச் சென்ற சமயம் இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே அமெரிக்கா கடன்அடிப்படையில் இக் கப்பலை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகள் இழு

(12ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் திடீர் சுற்றிவளைப்பு-தேடுதல்

## நீதிமன்றத்தின் அனுமதியுடன் நடந்தது

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நகரப் பகுதியிலும், புறநகர்ப் பகுதியிலும் அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங்களை அடுத்து நேற்று அதிகாலை 4.30 மணிதொடக்கம் காலை 8 மணிவரை சுற்றிவளைப்புடன் பாரிய தேடுதல் நடவடிக்கையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டனர்.**

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு மூன்று ஆண்டுகளுக்குப்பின்னர் முதன் முறையாக நேற்று இச் சுற்றிவளைப்பும் தேடுதலும் நடாத்தப்பட்டது.

இத் தேடுதல் வேட்டையில் சுமார் 200க்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர். இதனால் அங்கு மக்கள் மத்தியில் அதிர்ச்சியும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணி முதல் காலை8 மணிவரை நடைபெற்ற இச் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது ரெலோ அலுவலகம், பிரபல வர்த்தகர் ஒருவரின் வீடு உட்பட மூன்று வீடுகளும் இரண்டு மதுபான விற்பனை நிலையங்கள், இரண்டு ஹோட்டல்களும் தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரிலேயே சுற்றிவளைப்புடன் கூடிய தேடுதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸ்,இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல் தொடர்பாக பொலிஸாருடன் தொடர்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

# ரெலோ அலுவலகத்தில் 2 மணி நேரம் தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரப் பகுதியிலும் புறநகர்ப் பகுதியிலும் நேற்று அதிகாலை இடம்பெற்ற இராணுவ பொலிஸ் சுற்றிவளைப்பின் போது சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்குமேல் ரெலோ அலுவலகம் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இத் தேடுதல் சம்பவம் தொடர்பாக பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்திருப்பதாவது, நேற்று அதிகாலை இடம்பெற்ற சுற்றிவுளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது ரெலோ அலுவலகத்தில் நான்கு உறுப்பினர்கள் மட்டுமே இருந்துள்ளனர். இத்தேடுதலின் போது 20க்கும் மேற்பட்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

நதிமன்றத்தின் அனுமதி பெற்று இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் தேடுதலுக்கான காரணம் எதனையும் தெரிவிக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# நாளை மறுதினம் மாபெரும் பேரணி

## நல்லூரில் இருந்து ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இயல்பு வாழ்க்கையை வலியுறுத்தி நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ள மாபெரும் கண்டனப் பேரணிக்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து ஆரம்பமாகும் பேரணி யாழ்.செயலகத்தில் முடிவடையும்.

அங்கு யாழ்.அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும். இதற்கு முன்னதாக அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் மகஜர்கள் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

பேரணியில் கலந்து கொள்வோருக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இயல்பு வாழ்க்கையை வலியுறுத்தி நடத்தப்படும் இப் பேரணியில் பொது மக்களை அலை அலையாகக் கலந்து கொள்ளுமாறு பல்வேறு அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன. (த)

# இளம் பெண்கள் மீது மண் தூவி ரகளை இளைஞர்கள் ஏழு பேர் கைதாகினர்

## கசூர்னா கடற்கரையில் சம்பவம்

(காரைநகர்)

காரைநகர் கசூர்னா கடற்கரையில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் இளைஞர் 7 பேரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் மேலதிக விசாரணைகளுக்காக ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கசூர்னா கடற்கரைக்கு வருகை தந்திருந்த இளம் பெண்கள் சிலர் மீது இளைஞர்குழுவொன்று மணல் தூவி அட்டகாசம் செய்தது. இதனை பிரஸ்தாபட் பெண்களுடன் வந்திருந்த இளைஞர்கள் தடுக்க முற்பட்டனர்.

இதனால் இரு இளைஞர் குழுக்களுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது.

உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்காக வைக்கப்பட்டிருந்த நிழற்குடையையும் பிடுங்கி எடுதது ஒருவரை ஒருவர் தாக்கினர். இதில் ஏழு இளைஞர்கள் காயங்களுக்குள்ளாகினர்.

சம்பவத்தை அறிந்து ஸ்தலத்திற்கு வந்த பொலிஸார் இளைஞர்கள் 7 பேரைக் கைது செய்தனர்.

சம்பவம் குறித்து காரைநகர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இன்று கலந்துரையாடல்

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செயற்பட்டு வரும் அனைத்து சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்களுக்குமடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# கட்சித் தலைவர்களுடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்கள். தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பதே சிறந்த நடைமுறை என்று சபாநாயகர் டபிள்யு.ஜி.எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

பாரர்ளுமன்ற உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், அண்மையில் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் இப்படி ஏன் நடந்து கொண்டோம் என்று இப்போது கவலைப்படுவார்கள்.

இந் நிலையில், இவ்விடயம் தொடர்பாக கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி பேச்சுவார்த்தை நடத்திய பின் அதுபற்றித் தீர்மானிப்பதே சிறந்ததாகும். இதில் நடைமுறைப் படுத்தக் கூடிய சிறந்த செயல் திட்டங்களை கட்சித் தலைவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சுற்றுச் சூழலின் சுத்தம் பேணுவதுகுறித்து யாழ்.செயலகத்தில் மாதாந்தம் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிலவும் சுற்றாடல் நிலைமைகள் குறித்து யாழ்.அரச அதிபரும் பிரதேச செயலர்களும் மாதாந்தம் கூடி ஆராய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலகத்தில இடம்பெற்ற யாழ்.மாவட்ட சுற்றாடல் நிலைமைகள் குறித்து ஆராயும் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேலதிக அரச அதிபர் எஸ்.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. இராசையா உட்பட யாழ்.மாவட்ட சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி சபை அதிகாரிகள் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ். மாவட்டத்திலுள்ள உணவகங்கள் மற்றும் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படும் இடங்கள் கழிவு அகற்றப்படும் இடங்கள், சட்ட பூர்வமற்ற மது பானக் கடைகள் என்பவற்றாலும் கட்டாக்காலிகளின் தொல்லைகள் மற்றும் கழிவு நீர் வடிகால்களின் சீரற்ற தனமைகள் மற்றும் அதிகரித்து வரும் பொலித்தீன் பாவனைகள் என்பவற்றாலும் சூழலின் இயல்பு நிலையில் தாக்கங்கள ஏற்பட்டு பல்வேறு தொற்று நோய்களும் சூழல் குறைபாட்டு பிரச்சினைகளும் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், சுற்றாடலின் சம நிலையைப் பேணுவதற்காக பொலித்தீன் பாவனையை ஒழித்தல், தொற்றுநோய்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல், கட்டாக்காலிகளை அழித்தல், கழிவகற்றல் தொடர்பான நடைமுறைகளில் திருப்திகரமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்றவற்றை செயற்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மக்கள், கிராம சேவகர்கள், பிரதேச செயலர்கள பொது அமைப்புகள் என்பவற்றின் ஒத்துழைப்புக்களைப் பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-19,4)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றுமுதல் தொடர் வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பல்கலைக் கழகச் செயற்பாடுகளில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் கடந்த காலங்களில் பல தடவைகள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த போதும் எத்தகைய மாறுதல்களும் ஏற்படாததமையைத் தொடர்ந்தே தற்போது மீண்டும் தொடர் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களின் பணிகளை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும்,

யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளரின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக இடம்பெற்ற மோசடிக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியும்,

துணைவேந்தர் விடுதிக்கு காப்பாளர் நியமனம் விதிமுறைக்கு முரணான வ்கையில் இடம்பெற்றுள்ளமை மற்றும் சம்பளப்படி நிலுவையுடன் வழங்கப்படாமை ஊழியர் இடர்கடன மீளளிப்புத் தொகையை கடன் வழங்கலுக்கு மீளப் பயன்படுத்தியமை உள்ளிட்ட 7 அம்சக்கோரிக்கைகளை முன் வைத்தே யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஆயினும் யாழ்.பல்கலைக் கழகத்தில் பாதுகாப்புச் சேவை மற்றும் நீர்விநியோகப் பணிகள் வழமை போல் இடம் பெற்று வருகின்றன.

வவுனியா, கைதடி, மருதனார் மடம் ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழக வளாகங்களிலும் இப்போராட்டம் இடம் பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-19,10)

## இந்திய மீனவர்கள் அத்துமீறல் குறித்து

# பாராளுமன்றத்தில் குரல் கொடுக்க கூட்டமைப்பினர் தயாராகின்றனர்

(திருநெல்வேலி)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்தி இயல்பு நிலையில் குடாநாட்டு மீனவர்கள் கடற்றொழில் மேற்கொள்வது தொடர்பான முத்தரப்புச் சந்திப்பொன்று நேற்று மு.ப. 11 மணியளவில் யாழ். ப.நோ .கூ. சங்க மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் எஸ்.சிவநேசன், ம.க.ஈழவேந்தன் ,எஸ்.கஜேந்திரன் ஆகியோரும் விடுதலைப் புலிகள் சார்பில் கடற்புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் அன்பழகன், யாழ்.மாவட்ட ஊடகப் பேச்சாளர் இமையவன் மற்றும் மீனவர்கள் சார்பில் வட மாகாண கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் எஸ்.தவரட்ணம் செயலாளர் எஸ்.சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய கடற்பரப்புக்களில் குடாநாட்டு மீனவர்கள் சுதந்திரமாக மீன் பிடிக்க முடியாது இருப்பது குறித்தும் சுட்டிக் காட்டிய மீனவர் பிரதிநிதிகள் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என கூட்டமைப்பு எம்.பிக்களிடம் கோரிக்கை விடுத்தனர்

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதுடன் உரிய காலத்தில் இதற்கான தீர்வு காணப்படும் எனவும் தீர்க்கக கூடிய பிரச்சினைகளை மட்டுமே தம்மால் அணுக முடியும் எனவும் கூட்ட மைப்பினர் இதற்குப் பதிலளித்தனர். இதே வேளை இவ்வாறான சந்திப்புக்களை மாதம் ஒருமுறை நடத்துவதெனவும் ஏகமனதாக தீர்மானிககப்பட்டது. (உ-43,16)

## விமான சேவையை இலகுவாக்க

# இலங்கை-தாய்லாந்து பரஸ்பர இணக்கம்

(கொழும்பு)

இலங்கையும் - தாய்லாந்தும் தமது பரஸ்பர விமான சேவைகளை இலகுபடுத்தும் உடன்படிக் கையில் அண்மையில் கைச்சாத் திட்டுள்ளது.

பாங்கொங்கில் நடைபெற்ற இந் நிகழ்வில் இலங்கையின் சார்பில் துறைமுக விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆரியரத்தினகமகே கைச்சாத்திட்டார்.

1950 ஆம் ஆண்டு தாய்லாந்தும் இலங்கையும் செய்து கொண்ட உடன்படிக்கையை முற்றாக மாற்றி அமைக்கும் வகையிலேயே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-60,10)

## மாதிரிப் பயிற்சி வினாத்தாள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் நலன் கருதி கோப்பாய் கோட்ட அதிபர்கள் சங்கம் கல்வி அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மாதிரி பயிற்சி வினாத்தாள்க்ளை இலவசமாக வழங்கவுள்ளன.

6தடவைகள் இலவசமாக வழங்கப்படவுள்ள இவ் வினாத்தாள்களின் முதலாவது தொகுதி 15ஆம் திகதிஇன்று செவ்வாய்க் கிழமை வழங்கப் படவுள்ளதாக கோப்பாய் கோட்ட உதவிப் கல்விப் பணிப்பாளர் சி.சிவஞான சுந்தரம் தெரிவித்தார். (உ-79)


# கலாசாரத்தைப் பாதுகாக்க கல்விமான்களின் அனுசரணை

(கொழும்பு)

கலாசாரத்தையும் தேசிய பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் முகமாக தேசிய கொள்கை வகுக்கப்படவுள்ளதால் இது தொடர்பாக கல்விமான்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து யோசனைகள் வரவேற்கப்படுவதாக கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் எச்.எம்.விஜிந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கல்விமான்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து பெறப்படும் யோசனைகள் உள்ளடக்கப்பட்ட நகல் சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டு விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-60,10)






தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் சேவாச்சிரம நடமாடும் நூலகவாகனம் நேற்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தனது முதல் பணியை ஆரம்பித்த போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:ஞ.ஐங்கரன்)






யாழ்.மாவட்ட சூழல்-அபிவிருத்தி குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.செயலகத்தின் பொது மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிவசுவாமி தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:ஞ.ஐங்கரன்)

# தமிழ்மொழி செம்மொழி ஆக்கப்பட்டால் கிடைக்க இருக்கும் பெறுபேறுகள்

## தி.மு.க. தலைவர் கருணாநிதி விளக்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

பல்கலைக்கழகங்களில் தற்போது தமிழ் மொழி கீழ்த்திசை மொழி என்று கருதப்படுகிறது. இந்நிலை மாறி இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் உலகப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மொழிக்குத் தனி இருக்கை நிறுவப்படும். அந்தத் துறைகள் தனித்தன்மையுடன் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

சமஸ்கிருதத்திற்கு இந்திய அரசு நேரடியாக ரூ.40 கோடியும், அரசு சார்பு நிறுவனங்கள் மூலம் ரூ.100 கோடியும் ஒதுக்கி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு உதவிவருவது போல் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் உதவிகிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டிலும், இந்திய நாட்டிலும் பரந்துவிரிந்து கிடக்கும் கல்வெட்டாய்வு, ஓலைச்சுவடி ஆய்வுகள் சமஸ்கிருதத்தை மையப்படுத்தியே ஆராயப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ் மொழியை மையப்படுத்தி உண்மையான வரலாற்று பண்பாட்டுக் கருத்துகள் வெளிவர முடியும்.

அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேகமூட்டும் வகையில் மேலும் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்திய மொழிகளில் மட்டும் அல்லாது ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் தமிழ் இலக்கியங்களும் நவீன படைப்புகளும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

தமிழ் செம்மொழியாக்கப் படவேண்டும் என்று 1965 இல் மாநிலங்களவையில் அண்ணா குரல் கொடுத்தார். 1996 இல் திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில் 'தமிழையும் இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்க வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைப் பின்பற்றி 2000ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அப்போதைய பிரதமர் வாஜ்பாய்க்கு தி.மு.க. அரசின் முதல்வர் என்ற வகையில் கடிதம் எழுதினேன். செப்ரெம்பர் 2003 இல் விழுப்புரத்தில் நடந்த தி.மு.க. மாநாட்டிலும் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உலகில் உள்ள 600 முக்கிய மொழிகளில் இலக்கிய, இலக்கணம் உடையவை 300. இதில் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடையவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், ஹீப்ரு, கிரீக். இதில் லத்தீனும், ஹீப்ருவும் செத்துப்போன மொழிகள். ஹீப்ருவுக்கு உயிரூட்டும் முயற்சியில் இஸ்ரேல் அரசு ஈடுபட்டுள்ளது. கிரீக் மொழி தற்போது புதுவாழ்வு பெற்று வருகிறது. சமஸ்கிருதத்துக்கு என்றுமே பேச்சு வழக்கு இருந்ததில்லை. எழுத்து வழக்கு மட்டுமே உண்டு.

இது குறித்துக் கருத்துத் தெரிவிக்க தமிழறிஞர்கள் குழு நியமிக்கப்பட்டது. அக் குழுவின் கருத்துரை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்துக்கு மத்திய அரசு அக் கருத்துரையை அனுப்பியது. அந்த நிறுவனம் தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கலாம் என்ற பரிந்துரையுடன் அதை மத்திய அரசுக்கு அனுப்பியது.

1998 இல் சென்னைப் பல்கலைக்கழகமும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமும் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ் செவ்வியல் மொழி என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பிவைத்தன. 1918 லேயே சைவசித்தாந்த மகா சமாஜம் நடத்திய மாநாட்டிலேயே தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1919 லும், 1920லும் இதே போன்ற தீர்மானங்களை நிறைவேற்றியது.

2003 ஏப்ரல் 8இல் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. கட்சிகளின் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து இந்தக் கோரிக்கை குறித்து மனு அளித்தனர். 2003 ஆகஸ்ட் 18 இல் நாடாளுமன்றம எதிரே தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச் சான்றோர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

இப்போது எட்டாவது அட்டவணை மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாக்கிட ஆய்வு நடக்கும் என்றும், தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்படும் என்றும் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரையில் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கூறியுள்ளார். இதற்காக அவருக்கு ஒரு கோடி நன்றி தெரிவித்துக் கொள்ளத் தமிழ்நாடு கடப்பாடுடையது. (முற்றும்) (து)



## 14 இருக்கை கொண்ட சிறிய 'சரத்' விமானம் விரைவில் சேவையில் ஈடுபடுத்த முடிவு

(புதுடில்லி)

உள் நாட்டிலேயே முற்றிலும் வடிவமைக்கப்பட்டு அண்மையில் வெற்றிகரமாக விண்ணில் செலுத்திச் சோதனை நடத்தப்பட்ட 14 இருக்கைகளுடனான 'சரத்' என்ற மிகச் சிறிய பயணிகள் விமானத்தை வர்த்தக ரீதியில் பிரதமர் மன்மோகன சிங் வெகுவிரைவில நாட்டுக்கு அர்ப்பணிக்க இருக்கிறார்.

மத்திய அறிவியல்துறை இணையமைச்சர் கபில் சிவல் நேற்றுமுன்தினம் யு.என்.எஸ்.செய்தி நிறுவனத்திடம் இத் தகவலைத் தெரிவித்தார். காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியும் இதற்கான துவக்க நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவேண்டும் என்று அவருக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்திய அறிவியல் தொழில் நுட்பத் துறையின் தொழில் நுட்ப வளர்ச்சி வாரியம், அறிவியல் மற்றும தொழில் ஆராய்ச்சிக் குழு, மத்திய சிவில் போக்குவரத்து அமைச்சகம் ஆகியன இணைந்து 160 கோடி ரூபா நிதியுதவியுடன் 'சரத்' பயணிகள் விமானம் வடிவமைக்கப்பட்ட




## வாஜ்பாயின் காலங்கடந்த ஞானோதயம்

குஜராத் முதலமைச்சர் பதவியிலிருந்து நரேந்திரமோடியை நீக்குவது பற்றி பா.ஜ.க. பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

குஜராத் கலவரம் ஏற்பட்டவுடனேயே நரேந்திரமோடியைப் பதவி நீக்கம் செய்திருக்கவேண்டுமென்றும் முன்னாள் பிரதமர் வாஜபாய் தெரிவித்துள்ளாரென எஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைக் கடுமையாக விமர்சனம செய்ததனால் எவ்வித ஆதாயமும் கிடைக்கவில்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

ஹிமாலயப் பிரதேசத்திலுள்ள பணாரியில் ஒரு வாரகாலம் ஓய்வெடுப்பதற்காக வந்திருந்த வாஜ்பாய் செய்தியாளர்களிடம் பேசிய போது மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. தோல்வி கண்டதற்கு குஜராத் கலவரமும் ஒரு காரணம் என்று கூறினார்.

குஜராத் கலவரத்தினால் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயரை நீக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றியும் பா.ஜ.க. செயற்குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்படுமென்று அவர் தெரிவித்தார்.

குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியை பதவி நீக்கம் செய்வதால் கட்சிக்கு ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள் குறித்தும் அக்கூட்டத்தில் ஆராயப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

குஜராத்தில் கலவரம் ஏற்பட்டவுடனேயே மோடியைப் பதவி நீக்கம் செய்திருக்க வேண்டுமென்றும் வாஜபாய் கூறினார்.

அரசியலிலிருந்து ஓய்வு பெறும் பேச்சுக்கே இடமில்லையென்று கூறிய வாஜ்பாய், பா.ஜ.க. வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பாடுபடப் போவதாகவும் தெரிவித்தார்.

எல்.கே.அத்வானி தலைமையில் பா.ஜ.க. அடுத்த மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டுமெனத் தான் விரும்புவதாகவும் வாஜ்பாய் கூறினார்.

ஐக்கிய முற்போக்குக் கட்சி



களுக்கிடையிலான கருத்த முரண்பாட்டினால் அக் கூட்டணி அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கும் நீடிக்காது எனக் கூறிய அவர், தேர்தல் முடிவு முற்றிலும் எதிர்பாராத ஒன்று என்றார். (து)

## ஒலியைவிட வேகம் கூடிய பிரமோத் ஏவுகணை

(புதுடில்லி)

ஒரிசா மாநிலம் ராதாபூர் அருகே சண்டிபூர் ஏவு தளத்திலிருநது 'பிரமோத்' என்ற ஏவுகணை நேற்று முன்தினம் வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

இந்தியா - ரஷ்ய கூட்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ், வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணை, 8 மீற்றர் நீளமும் 3 தொன் நிறையும் கொண்டதாகும் என்று பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.15 மணியளவில் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்ட இந்த ஏவுகணை 290 கிலோ மீற்றர் தொலைவு வரையான இலக்கினைத் துல்லியமாகத் தாக்கக் கூடிய வல்லமை பெற்றதாகும்.

கப்பலிலும் நீர் மூழ்கிக் கப்பலிலும் விமானத்திலும் எடுத்துச் செல்ல ஏதுவாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.கப்பலொன்றிலிருந்து விண்ணில் ஏவப்பட்ட இந்த ஏவுகணை, வினாடிக்கு 14 கிலோ மீற்றர் வேகத்தில், அதாவது ஒலியை விட இரட்டிப்பு வேகத்தில் பாய்ந்து சென்று தாக்கக் கூடியதாகும்.

இலக்கை நெருங்குவதற்கு 20 கிலோ மீற்றருக்கு முன்னதாகத் தாக்குதல் திசையைத் தானாகவே மாற்றக் கூடிய வகையில் பிரமோத ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (து)



மும்பையில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற திரைத்துறை விழாவில் பொலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான் உடன் மனைவி கௌரி.

## இந்தியச் செய்திகள்

## இந்தியாவின் விவசாயத்துறை பற்றி மத்திய வர்த்தக அமைச்சர் விள்க்கம்

(புதுடில்லி)

இந்தியாவில் விவசாயம் தான் மக்களுடைய வாழ்க்கை முறை என்பதால், வரும் காலகட்டத்தில் உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தங்கள் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் இருப்பதையே இந்தியா விரும்புகிறது என்று இந்திய வர்த்தக அமைச்சர் கமல்நாத் கூறியிருக்கிறார்.

பிரேஸில் தலை நகரில் அந்நாட்டுப் பிரதமருடன் பேச்சு நடத்திய கமல்நாத், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இந்தியாவில் வேளாண்மை என்பது ஒரு பொருளோ, வியாபாரமோ அல்ல; இது மக்களின் வாழ்க்கை முறை என்று தெரிவித்தார்.

இந்தியாவின் பன்முகத் தன்மையையும் பலவகைக் கால நிலைகளையும் ஒவ்வொரு நாடும் புரிந்து கொள்ளவேண்டுமென்று கூறிய அவர், உலகவர்த்தக நிறுவனம் சார்பில் வரும் காலகட்டங்களில் கொண்டுவரப்படும் எந்த வகையிலான ஒப்பந்தங்களும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலேயே இருக்க வேண்டும் என்பதை உலகநாடுகள் புரிந்துகொள்ள வேண்டுமென்றார்.

உலக வர்த்தகம் சம்பந்தப்பட்ட முதன் முறைப் பேச்சுக்களின் போது, இந்தியா சார்பில் கையெழுத்திட்ட காங்கிரஸ்தான் இப்போதும் ஆட்சியில் உள்ளதென்று குறிப்பட்ட அவர், இந்திய விவசாயிகளின் நலன்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படும் நிலையில் உலக வர்த்தக நிறுவனத்துடன் இந்தியா சேர்ந்து செயற்படுமென்றார். (து)

## அல்கெய்டா தீவிரவாதிகளிடம் உள்ள

# பாக். படையினரை விடுவிக்க அரசாங்கம் தீவிர முயற்சி

(இஸ்லாமாபாத்)

அல்கெய்டா தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியிருக்கும் பாகிஸ்தான் இராணுவ கொமாண்டோக்களை விடுவிக்க பாகிஸ்தான் அரசு தீவிர முயற்சி செய்துவருகிறது.

ஆப்கான் எல்லையையொட்டிய பாகிஸ்தானின வாஷிரிஸ்டான் பகுதியில் அல்கெய்டா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகவும் மறைவிடங்களை ஏற்படுத்தி மறைந்து வாழ்ந்து வருவதாகவும் கடந்த 3 நாட்களுக்கு முன்பு கிடைத்த தகவலை அடுத்து பாகிஸ்தான் இராணுவம் அந்தப் பகுதியில் விமானப் படைகளை அனுப்பி தீவிரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்து சரமாரியாகத் தாக்குதல் நடத்தியது.

பாகிஸ்தான் இராணுவத்தின் விமானப்படையும் பீரங்கிப் படையும் மற்றும் கொமாண்டோ படையினரும் தீவிரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்து மும்முனைத் தாக்குதல் நடத்தியதில் 40ற்கும் மேற்பட்ட அல்கெய்டா தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 20பேரும் இந்தச் சண்டையில் பலியாகினர்.

இந்நிலையில், பாகிஸ்தான் இராணுவம் விமானப்படை மூலம் வாஷிரிஸ்டான் மலைப்பகுதிகளில் கொமாண்டோ படையினரை இறக்கி தாக்குதல் நடத்தியது. இவ்வாறு மலைப்பகுதிகளில் இறக்கி விடப்பட்ட பாகிஸ்தான் படையினரை அல்கெய்டா தீவிரவாதிகள் சுற்றி வளைத்து தற்போது பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

இதனால் சண்டை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு தற்போது அல்கெய்டா தீவிரவாதிகளின் பிடியில் சிக்கி இருக்கும் பாகிஸ்தான் கொமாண்டோக்களை விடுவக்க பாகிஸ்தான் அரசு தீவிரமுயற்சி எடுத்துவருகிறது. அதற்கு முதற்கட்டமாக வாஷிரிஸ்டான் மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களில் சிறந்த மூத்த குடிமக்களை தேர்ந்தெடுத்து தீவிரவாதிகளிடம் சமரசப்பேச்சுவார்த்தை நடத்தி கொமாண்டோக்களை மீட்க பாக் அரசு தீவிர முயற்சி எடுத்துவருகிறது.

இது குறித்து பாகிஸ்தான் அரசு தரப்பில் இருந்து ஆதாரபூர்வமாக எந்தச் செய்திக்குறிப்பும் இதுவரை வெளிவரவில்லை. இருப்பினும், பாகிஸ்தான் மண்ணை விட்டு தீவிரவாதிகளை விரட்டியடிக்கும் வரை வெளிநாட்டு தீவிரவாதிகளுக்கு எந்தவித இரக்கமும் காட்டப்போவதில்லை என்று பாகிஸ்தான் இராணுவ செய்தித்தொடர்பாளரான மேஜர் ஜெனரல் சௌக்கத் சுல்தான் தெரிவித்துள்ளார். (உ-9)




சமீபத்தில் கராச்சியில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அல்கெய்டா இயக்கத்தைச் சேர்ந்த ஒன்பது பேரை பாகிஸ்தான் கைது செய்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களின பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் இராணுவ வீரர்கள்.




பிலிப்பைன்ஸின் 106வது சுதந்திர தினத்தையொட்டி, தலைநகர் மணிலாவில் கடநத சனிக்கிழமை அதி பர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில்,பங்கேற்ற அதிபர் குளோரியா மதுக் கோப்பையுடன்

## நாடுகளிடையே சமத்துவம் அற்ற நிலை அதிகரித்து வருவதாக அனான் கவலை

(லண்டன்)

நாடுகளிடையே உள்ள சமத்துவம் அற்ற நிலை கடந்த 40 ஆண்டுகளில் மிகவும் அதிகரித்துள்ளதாக ஐ.நா பொதுச்செயலர் கோபி அனான் வருத்தத்துடன் கூறியுள்ளார்.



கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வளரும் நாடுகளுக்கான ஜி-77 நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் பேசுகையில் அனான் இவ்வாறு சொன்னார்.

மேலும் அவர் கூறியதாவது,

1964க்குப் பிறது வளரும் நாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. வர்த்தக விஷயத்தில் இத்தகைய பாகுபாடுகள் அதிக அளவில் உள்ளன. உலக வர்த்தக பிராந்தியத்துக்குள் வளரும் நாடுகளுக்கு அநேக இடையூறுகளும் தடைகளும் உள்ளன. கடன் நெருக்கடிகள் சர்வதேச செலாவணி கட்டமைப்பில் உள்ள பலவீனங்களையே வெளிப்படுத்துகின்றன.

இனியாவது பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வளர்ச்சிக்கான வாய்ப்புகளை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.ஜி-77 அமைப்பு 1964 ல தொடங்கப்பட்டது. இதன் 11வது கூட்டம் பிரேஸிலின் சாவோ பாவ்லோவில் கடந்த திங்கட்கிழமை தொடங்கவுள்ளது.மேம்பாட்டுக்கான ஐ.நா.அமைப்பும் 1964ல் தான் தொடங்கியது.ஜி-77இல் தற்போது 135 நாடுகள் உறுபபினர்களாகஉள்ளன. (உ-9)

## இந்தியருக்கு புருணையில் கசையடி

(பெகாவன்)

புருணை நாட்டில் விசாக்காலம் முடிந்த பின்னரும் தங்கியிருந்த குற்றத்துக்காக ஓர் இந்தியருக்கும் ,பாகிஸ்தானியருக்கும் தலா மூன்று சவுக்கடிகள் கொடுக்கும்படி அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

அவர்கள் இருவருக்கும் தலா மூன்று மாதம் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்தியரான கமாலுதீன் அபு பக்கர் அப்துல் அஜீஸ் என்பவர் விசா முடிந்து தங்கியதாக அந்த நாட்டு குடியேற்ற அதிகாரிகளிடம் .சரண் அடைந்தார்.அதிகாரிகள் சோதனை நடத்திய போது பாகிஸ்தானைச் சேர்ந்த மியான் ஜன் அலி அக்பர் கைது செய்யப்பட்டார். (உ)

## கார்க் குண்டுத் தாக்குதல் ஈராக் பொலிஸார் நால்வர் பலி

(பக்தாத்)

ஈராக் தலைநகரான தென் கிழக்கு பக்தாத்தில் நேற்று முன்தினம் ஈராக் பொலிஸார் வழக்கமாக ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள ரோந்து சென்றவழியே நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில் திடீரெனக் குண்டு வெடித்தது.

இதில் அந்த கார் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. எதிர்பாராத விதமாக நிகழ்ந்த இந்த திடீர் காரக குண்டு வெடிப்பில் சிக்கி 4 பொலிஸாரும் வீதியில் நடந்து சென்ற 8 அப்பாவி ஈராக்கியர்களும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர்.

மேலும் 13 பேர் பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஒரு பொலிஸாரும் அடங்குகிறார். (உ-9)

## WORLD NEWS உலக தரிசனம்




மேற்கு வர்ஜீனியா மாட்வன் நகருக்கருகில் வெள்ளப் பெருக்கினால் குவித்த குப்பைகளை அகற்றும் பணியில் பெருந் தெருக்கள் திணைக்கள ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## அணு ஆயுதக் கருவியை

# இந்தியாவுக்கு விற்ற அமெரிக்க நிறுவனத்திற்கு அபராதம்


தடைஉத்தரவை மீறி இந்திய நிறுவனத்துக்கு அணு ஆயுதத் தொழில்நுட்பம் தொடர்பான கருவியை ஏற்றுமதி செய்த அமெரிக்க நிறுவனத்துக்கு அந்தநாட்டு நீதிமன்றம் 3இலட்சம டொலர் அபராதம் விதித்துள்ளது.

இந்தியா கடந்த 1998ஆம் ஆண்டு போக்ரானில் அணு குண்டுகளை வெடித்து,சோதனை செய்தது. இதையடுத்து இந்தியா மீது பொருளாதார தடைகளை விதித்த அமெரிக்கா அணு ஆயுதங்கள்தயாரிக்க உதவும் எந்தக் கருவியையும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என உத்தரவிட்டது.

இந்தநிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த பெர்க்கிலி நியுக்கிளியோனிகஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் இந்தியாவைச் சேர்ந்த அரசுத்துறை நிறுவனமான பாபா அணு ஆராய்ச்சி மையத்துக்கு பல்ஸ் ஜெனரேட்டர் என்ற கருவியை விற்பனை செய்தது.

இதுபோன்ற கருவிகளை விற்பனை செய்வதற்கு முன்பு, அமெரிக்க வர்த்தக அமைச்சகத்திடம் அனுமதி பெறவில்லை. மேலும் பல்ஸ் ஜெனரேட்டர் போன்ற அதி நவீன கருவிகளை இந்தியாவுக்கு விற்பனை செயய,சிறப்பு அனுமதி பெற வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் எந்த அனுமதியும் பெறாமல் பெர்க்கிளி நிறுவனம் விற்பனை செய்துள்ளது. இதையடுத்து இந்த நிறுவனத்தின் விறபனைப் பிரிவு இயக்குநர் ரிச்சர்டு ஹாமில்டன் முன்னாள் மேலாளர் வின்சென்ட் டெல்வினோ ஆகியோர் மீது கடந்த 2001 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் சதிசட்ட விதிமுறை மீறல் போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவருக்கும் தலா இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து சான்பிரான சிஸ்கோ நீதிமன்ற நீதிபதி பிலிஸ் ஹாமில்டன் தீர்ப்புக் கூறினார். ரிச்சாட ஹாமில்டனுக்கு 100 டொலர் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்தவழக்கில் இருந்து பெர்க்கிலி நிறுவனத் தலைவர் டேவிட் பிரவுன் விடுவிக்கப் பட்டார். (உ-9)




வட மலேசியாவில் அமைந்துள்ள எண்ணெய் சுத்தி கரிப்புத் தொழிற்சாலை.

## நீச்சல் உடையில் இராமர் படம்

(ரோம்)

நீச்சல் உடையில் இராமர் படத்தை வடிவமைத்த இத்தாலிய ஆடை வடிவமைப்பாளர் ரோபர்டோ கவாலி மன்னிப்பு கேட்டுள்ளார்.

இந்துக்கள் வழிபடும் தெய்வ உருவங்களை செருப்புக்களிலும், கழிவறைப் பொருட்களிலும் வடிவமைப்பது மேற்கத்தைய நாட்டு வடிவமைப்பாளர்களின் வாடிக்கையாகிவிட்டது. இதற்கு எதிராக இந்துக்கள் போர்க்கொடி தூக்கியதும் தங்களது செயலுக்கு மன்னிபபு கோருவதும்,தயாரித்த பொருட்களை வாபஸ் பெற்றுக்கொள்வதும் தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில், இத்தாலி ஆடை வடிவமைப்பாளர் ரோபார்டோ கவாலி என்பவர் நீச்சல் உடையில் இராமர் படதததை வடிவமைத்து வெளியிட்டுள்ளார்.

இந்த ஆடைகள் பிரிட்டன் விற்பனை அறைகளில் விற்பனைக்கு வந்துள்ளன. நீச்சல் உடையில் இராமர் படத்தை வடிவமைத்த கவாலிக்கு பிரிட்டன் இந்துக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்துக்கோயில் தேசிய கவுன்சில் தலைவர் விமல் கிருஷ்ணதாஸ், கவாலிக்கு கடும் கண்டனம் தெரிவித்ததை தொடர்ந்து அவரது தகவல் தொடர்பு அதிகாரி பகிரங்க மன்னிப்பு கேட்டார்.

இதுகுறித்த அவர் குறிப்பிடுகையில், இந்துக் கடவுள்களை நாங்கள போற்றவே செய்கிறோம் இந்துக் கடவுள்களை அவமதிப்புச் செய்யும் எண்ணத்துடன் ஆடையை வடிவமைக்க வில்லை. இந்துக்களின் மனது புண்படும் வகையில் இந்த ஆடை அமைந்திருப்பதாக கூறப்படுவதால் இதற்காக நாங்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்கின்றோம் என்று கூறியுள்ளார். (உ)

# அரசின் அலட்சியப் போக்குக்கு எதிராக அனைவரும் அணி திரள வேண்டும்

## நுண்கலைப்பீடம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு 28 மாதங்கள் கடந்த போதிலும், பேச்சுவார்த்தை தொடர்பாக இடைக் கால நிர்வாகம் தொடர்பாக எது வித தீர்க்கமான முடிவுகளும் வெளி வராத காரணத்தினால் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை நடை பெறவிருக்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்ட பேரணிக்கு- அரசின் அலட் சிய போக்குக்கு எதிராக அனைத்து மக்களும் அணி திரள்வோம்.

மேற்படி பேரணி தொடர்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் கவின்கலை மன்றம் வெளி யிட்ட செய்திக் குறிப்பில இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு ஆட்சிப் பீடம் ஏறிய சந்திரிகா தலைமயிலான அரசு,சமாதானம் என்ற பூச்சாண்டி யைக் காட்டி தேர்தலில் வெற்றியை அடைந்தது. எனினும் சமாதானத் திற்கான யுததம் என்று பெயரிட்டு தமிழர் மீதான தனது காடைத்தனங் களை ஏவிவிட்டது.

இதனால், பெரும் உயிர் இழப் புக்களும், பாரிய சேதங்களும் ஏற் பட்டன. 2004 ஆம் ஆண்டும் இதே சமாதானம் என்ற போர்வையில் ஆடசிபீடம் ஏறிய சநதிரிகா தலைமை யிலான அரசு கடுமையான இனவா தப் போக்கைக் கொண்டிருக்கும் ஜே.வி.பியுடன் இணைந்திருப்பது மீண்டும் ஒரு யுத்தத்திற்கு இட்டுச் செல்லும் போக்கையே கொண்டுள் ளது. சமாதானம் நிலைநிறுத்தலை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த போதிலும் அதன் தற்போதைய செயற்பாடுகள் பெரும் ஐயத்தை தோற்றுவிக்கின்றன.

★ஆட்சிப்பீடம் ஏறிய பின்பும் இது வரை காலமும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காது காலத்தை இழுத்த டிப்பது.

★போர் சம்பந்தமான செயறபாடு களில் அதிக நாட்டத்துடன் செயற் படுவது.

★ இனங்களிடையே மோதல் களை உருவாக்க தூண்டுவது.

★ இதுவரை எதுவித இயல்பு வாழ்க்கையை தோற்றுவிப்பதற் கான காரணிகளை ஏற்படுத்தாம லிருப்பது.

★அகதிகளாகவும், எதிரிகளாகவும் இன்றுவரை முடங்கியிருககும் தமி ழர்களின் அவல நிலையை போக்க எவ்வித செயற்பாடும் மேற்கொள் ளாமல் இருப்பது.

இவை போன்ற நிலைமைக ளால இவ்வரசு தமிழர் விடயத்தில் எவ் வாறான போக்கை கொண்டுள்ள தென்பதை தெளிவாக எடுத்துக் காட் டுகின்றது. இவ வாறான அசமந்தப் போக்கை விடுத்து பின்வரும் ஐந்து கோரிக்கைகளையும் அரசு உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

★ இடைக்கால நிர்வாகத்தை தமி ழீழ விடுதலைப்புலிகளிடம் வழங்க வேண்டும்.

★ இனப்பாகுபாடு இன்றி தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை உட னடியாக ஏற்படுத்த வேண்டும்.

★ தமிழர் நிலங்களில் ஆக்கிர மிப்பும், சிங்கள குடியேற்றங்களும் நிறுத்தப்பட்டு மீள்குடியமர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

★ தமிழ்த் தேசிய பற்றாளர் படு கொலைகள் உடனடியாக நிறுத்தப படல் வேண்டும்.

அண்மையில் கிழக்கு மாகாணத் தில் இடம்பெறும் படுகொலைகள் குறிப்பாக பல்கலைக்கழக பேரா சிரியர் தம்பையா அவர்களும், பத் திரிகையாளர் ஜீநடேசன் என்போரும திட்டமிட்டு கொலை செய்யப்பட் டமை.

★ மலையகத் தமிழர் மீதான வன் முறைகள்உடனடியாக நிறுததப் படல் வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற கந்தப் பொல கலவரமானது இனப்பிரச் சினையை தோற்றுவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட காடைத்தனங் களின் ஒன்றாகும்.

மேற்குறித்த கோரிக்கைகளை அரசுக்கு ஆணித்தரமாக எடுத்துக் கூற அனைத்து மக்களும் எதிர் வரும் 17ஆம் திகதியன்று ஓர் அணி திரள்வோம் என்றுள்ளது. (உ)

# தவறான கணனிப் பாவனையை தடுக்கச் சட்டமூலம் வருகிறது

(கொழும்பு)

கணனி மூலமான குற்றச்செயல் களை குறைக்கும் முகமாக நீதி யமைச்சு பாராளுமன்றில் சட்ட மூலம ஒன்றை சமர்ப்பிக்கவிருக் கிறது. கணனிகளைத் தவறான வழியில் பயன்படுத்துவதைக் குறைத்து சமூகத்தை பாதுகாக் கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

நதியமைச்சர் யோன செனிவிரட் ணவினால் பாராளுமன்றில் இச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவிருக் கிறது.

கணனிகள் சட்டபூர்வமற்ற முறை யில் பயன்படுத்தப்படுமெனில் அவற் றின் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டி சட்ட மூலம் கொண்டுவரப் படுகிறது. கணனி மூலமாக சட்ட விரோத செயல்களை மேற்கொள்ப வர்களும் அதனால் பாதிக்கப்படுப வர்களும் இலங்கையர்களாக இருப் பின் பாதிக்கப்படுபவர் கொழும்பு உயர் நீதிமன்றிலோ அல்லது மேல் மாகாணத்தின் உயர் நீதிமன்றிலோ வழகதுப் பதிவு செய்ய முடியும். மேற படி குற்றம் புரிந்தவர் வெளிநாடொன் றினைச் சேர்ந்தவராக இருப்பின வழக்கு தொடரமுடியாது.

மேற்படி சட்டவிரோத நடவடிக் கைகளைக் கண்டுபிடிப்பதற்கு உயர் தொழில்நுட்ப வல்லுநர்களை நிய மிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இவர்கள் பொலிஸாரு டன் இணைந்து செயற்படுவர். மேற் படி தொழில்நுட்ப வல்லுநர் பதவிக்கு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச் சின் சிபார்சுடன் பொறுப்பான அமைச் சரால பொருத்தமானவர்கள் நியமிக் கப்படுவர். இவர்கள் பொலிஸாரின் உதவியுடன் எப்போதும் கணனிப்பா வனை யாளர்களின் வீட்டிற்கு முன்னறி வித்தல் இன்றி சென்று பரிசோத னையை மேற்கொள்ள முடியும்என் றும் மேற்படி சட்ட மூலம தெரிவிக்கிறது.

(உ-6)


## அன்பார்ந்த மாணவர்களே!

வலம்புரியின் மற்றுமோர் கல்விச் சேவை

**க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்**

மிக விரைவில் உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்.

## அன்பு வாசகர்களே!

அலைகடல் சூழ் மணிபல்லவத்தில் (நயினாதீவு) வீற்றிருந்து நம்மையாளும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இம் முறையும் வழமைபோல்

**நயினை நாகபூசணி அம்மன் பாமாலை**

உங்கள் வலம்புரியில் இடம்பெறவுள்ளது. உங்கள் பாமாலைகளை **"நயினை அம்மன் பாமாலை" வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.


## கலந்துரையாடல்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு முன்னெடுக்கப் படவுள்ள திட்டங்கள் பற்றி இதில் ஆரயப்படவுள்ளது.

(உ-35)

## பரீட்சைப் பெறுபேறு வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளி வாரப் பிரிவு 2000ஆம் கல்வியாண் டிற்கான கலைமாணி பகுதி I பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பல்கலைக்கழகத்தில் தற்போது இடம்பெற்றுவரும் ஊழியர் போராட் டம் முடிவுக்கு வந்ததும் பரீட்சார்த் திகள் தமது பெறுபேறுகளைப் பார்வையிடுவதுடன் மீள் பரீட்சார்த் திகளும் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என அறிவிக்கபபட்டுள் ளது. (உ)

## பொங்கல் விழா

(மல்லாகம்)

மல்லாகம் கோனப்புலம் ஞான வைரவ கோவில் வருடாந்த பொங் கல் விழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

(உ)

## வலம்புரி - சங்குநாதம்

### பிரதேச செய்தியாளர்கள் (பயிலுனர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில், பிரதேச செய்தியாளர்களை (பயிலுனர்கள்) நியமிப்பதற்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

♦ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

♦ பயிலுனர் தரத்தில் மூன்று மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் - ஆர்வமும் காணப்படுமடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

♦ பயிலுனராக தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

♦ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

♦ இலங்கையில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலும், ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

♦ ஏற்கனவே பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண் ணப்பிப்பின் அவர்கள் நிரந்தரச் செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

### தகுதியானவர்கள்

முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, விவாக நிலை, தொழில்புரியும் இடம், பதவி (இருப் பின்), கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கல்வித்தகைமை, பிறதகைமை என்பவை உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப் பங்களை,

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி, சங்குநாதம்,**
**இல: 15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு 20.06.2004க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ, அன்றி தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்*

### பிரதேச செய்தியாளர் (பயிலுனர்) தெரிவிற்கான பிரதேசங்கள்

**வலிகாமம்**

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர் மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தங்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
வண்ணார்பண்ணை
கொட்டடி
பாசையூர்
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
புன்னாலைக்கட்டுவன்
அச்செழு
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை
கரம்பொன்
நாரந்தனை
சரவணை

**தீவகம்**

மண்டைதீவு
அல்லைப்பிட்டி
வேலணை
புங்குடுதீவு
நயினாதீவு
நெடுந்தீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்

**வடமராட்சி**

கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரி மூலை
கொற்றாவத்தை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
பொலிகண்டி

**தென்மராட்சி**

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

**வன்னிப் பிராந்தியம்**

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முல்லைத்தீவு
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவ மடு

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 173 நலன்புரி நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பதினொரு நிர்வாக மாவட்டங்களில் மொத்தமாக 309 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் இயங்கிவருகின்றமை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிறுவனத்தினால் 2002 முதல் 2004 பெப்ரவரி மாதம்வரை திரட்டப்பட்ட தகவல்களின்படி மேற்குறித்த இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் 22 ஆயிரத்து 884 குடும்பங்களைச் சேர்ந்த 87 ஆயிரத்து 919 பேர் தங்கியுள்ளனர்.

இவ்வகையில் யாழ்.மாவட்டத்தில் 83 நலன்புரி நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 35 நிலையங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 26ம், மன்னாரில் 6ம், வவுனியாவில் 13ம், திருகோணமலையில் 10ம், புத்தளத்தில் 81ம், அனுராதபுரத்தில் 39ம், பொலநறுவையில் 5ம், குருநாகலில் 10ம், கொழுமபு மாவடத்தில் ஒரு நிலையமுமாக மொத்தம் 309 நிலையங்கள் தற்போதும் இயங்கிவருகின்றன.

இதேசமயம், நாட்டில் மொத்தமாக 95 ஆயிரத்து 734 குடும்பங்களைச்சேர்ந்த 3லட்சத்து 73ஆயிரத்து 79 பேர் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களிலும் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் 22ஆயிரத்து 884 குடும்பங்கள் இடம்பெயர்ந்தோர் நலனபுரி நிலையங்களிலும் 72ஆயிரத்து 850 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களுக்கு வெளியிலுமாக வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்பங்களுககான இலவச உலர் உணவு நிவாரணத்தை மாதாந்தம் அரசாங்கம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைசசு மூலம் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## தனியார் கல்வி நிறுவனங்களைப் பதிய 30ஆம் திகதி வரை கால அவகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், பிரதேசத்திற்கு உட்பட்ட. சகல தனியார் கல்வி நிறுவனங்களும் பிரத்தியேக வகுப்புக்களும் கணனிக் கற்கை நிறுவனங்களும் 30.06.2004ற்கு முன்னர் யாழ்.நல்லூர் தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்ட நிறுவனங்கள் பதிவுகளை 2004ஆம் ஆண்டின் செயற்பாட்டிற்காகப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றும் புதிதாகப் பதிவு செய்துகொள்ளும் நிறுவனங்கள் பதிவுக் கட்டணத்தோடு மாதாந்த சந்தாவையும் செலுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களைப் பெற கன்னாதிட்டி சயன்ஸ் ஹோலில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவன ஒன்றிய விசேட கரும பீடத்தின செயலாளருடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலத்திற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளாது நிறுவனங்கள, தொடர்ந்து இயங்குவதற்கான அனுமதிகள் மறுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## நேர்முகத் தேர்வுகுறித்த அறிக்கைகள் கிடைத்ததும் பொலிஸாருக்குப் பதவியுயர்வு

(களுத்துறை)

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் தொடர்பான அறிக்கைகள் கிடைத்ததும் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்படும் என தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் முடிந்துள்ள போதிலும் அதற்குத தோற்றியோர் தொடர்பிலான தேர்ச்சி அறிக்கைகள் இன்னமும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கவில்லை.

எனினும், இவ் அறிக்கைகள் அடுத்தவார இறுதிக்குள் பொலிஸ் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கும் எனவும் அறிக்கைகள் கிடைத்தவுடன் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்படும் எனவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபய சேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன, இந்தப் பதவி உயர்வுகள் மூலம் 4ஆயிரம் பேர் நாடளாவிய ரீதியில் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்குரிய பதவி உயர்வுகளுக்கான விதிமுறைகள் ஒழுக்கக்கோவைகள், சம்பள நடைமுறைகள், சேவைவிபரங்கள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருவதாகத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.(உ-4,61)

## ஜனாதிபதியின் அண்மைய அறிவிப்பு உள்நோக்கம் கொண்டது

தனக்கிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தின் மூலம், நாடாளுமன்றத்தைப் புறக்கணித்து, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி ஆலோசித்து வருவதாக கொழும்பு ஆங்கில வார இதழொன்று ஊகம் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இறைமைக்கோ, பாதுகாப்புக்கோ பங்கம் விளைவிகாத வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை யோசனை அமையும் பட்சத்தில் தாம் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாரென ஜனாதிபதி கடந்த சனியன்று இலங்கை மக்களுக்கு ஆற்றிய உரையில் தொிவித்திருநதார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதபதி முறைமையை ஒழிப்பதென்ற தனது முக்கிய நோக்கத்திற்கு நாடாளுமன்றத்தில் தேவைப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காத நிலையில், நாடாளுமன்றப் பெரும்பான்மையைப புறக்கணித்து, அரசியலமைப்பில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மாற்று வழிமூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான முன் நடவடிக்கைகளை ஜனாதிபதி ஏற்கனவே எடுத்திருந்தார்.

இதன் ஒரு அங்கமாக அரசியலமைப்பு மறுசீரமைப்புச் சபையை நியமித்து அதற்குப் பொறுப்பாக ஜயந்த தனபால எனப்படும் பிரபல சட்ட மற்றும் அரசியல் வல்லுனர் ஒருவரையும் அவர் நியமித்திருந்தார்.

எனவே, நாடாளுமன்றத்தைப் புறக்கணித்து வடக்கு, கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்குவது என்ற ஜனாதிபதியின் இந்தப் புதிய முடிவு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது என்ற தனது முக்கிய குறிக்கோளை அடைவதற்கான திட்டத்துக்கான ஒரு பரிசோதனை முயற்சியாக இருக்கலாம் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனிடையே, கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களை அடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 118 பேர், அரசாங்கத்துக்கு எதிராக ஓரணியில் திரண்டிருப்பதால், ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கான குறைந்தபட்சப் பெரும்பான்மையையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு இழக்கும் நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில், எதிரணியிலிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமக்கெதிராகச் செயற்படாதவாறு தடுக்கும் வகையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம், எதிரணியின் 118 ஆசன பலத்தை பலவீனப்படுத்துவதும் ஜனாதிபதியின் இந்த உடனடி நடவடிக்கைக்கான காரணமாக இருக்கலாம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

### ரயில் பயணிகள் மோசடி

பயணச்சீட்டின்றிப் பயணிக்கும் ரயில் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மக்கள் நெருக்கமாகவுள்ள பகுதிக்குள் நுழையும் சில பிரயாணிகள் நெரிசலைப் பயன்படுத்தி பயணச் சீட்டைப் பெறாமல் நகர்ந்து ரயிலகளுக்குள் நுழைந்துவிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மட்டும் 28ஆயிரத்திற்கும் அதிகமான பயணிகள் இவ்வாறு பயணச்சீட்டின்றிப் பயணம் செய்தமை கண்டுபிடிக்கப்படடுள்ளது. (உ-8)



யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்கத்தினர் ஏழு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

படங்கள்:-ஐ.ஐங்கரன்

## போர் அச்சமற்ற நல்லதோர் சூழலை ஜனாதிபதி சந்திரிகா ஏற்படுத்துவார்

## பிரதமர் மகிந்த நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல இன மக்களும் போர் அச்சமின்றி வாழக கூடிய சூழ்நிலையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்பாடுத்தியிருக்கின்றார்.

விரைவில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்தி சகல இன மக்களும் சுதந்திரமாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ்வதற்கு வழி ஏற்படுத்துவார் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொணடு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், எப்படிப்பட்டாவது நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்தி சகல இன மக்களும் சந்தோசமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் சகல பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது என்றார் (உ-60,10)

## இன்றைய யாப்பு நிலைபற்றி இருநாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்றைய யாப்புநிலை பற்றிய கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

கொழுமபில் இயங்கிவரும் மனித உரிமைகள் சட்ட நிதியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தில் இருந்து சுமார் 50க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குகொள்ளவுள்ளனர்.

நாட்டில் தற்போது அமுலில் இருககும் யாப்பு நிலையில் காணப்படும் பலம், பலவீனம் பற்றி இக் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படும் எனவும் தெரியவருகின்றது. (உ-16)

### விமானப்படைக்கு போர்க் கலங்கள் அவசர கொள்வனவு

இலங்கை விமானப்படையினர் கிபிர், மிக்-27,கே-8 ரக விமானங்களையும் எம்-ஐ 17 ரக ஹெலிகொப்டர்களையும் உடனடியாகக் கொள்வனவு செய்யவுள்ளனர்.

இவற்றுக்கான அவசரதேவை விமானபபடைக்கு எழுந்திருபபதை விமானப்படை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

இதேவேளை, கடந்தவாரம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த உக்ரேன் நாட்டுத் தயாரிப்பான மிக்-27 ரக விமானம ஒன்று நீர்கொழும்புக் களப்பில் வீழ்ந்ககமை தெரிந்ததே. (உ)

# பி.செ.பிரிவுகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளின இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

நடைபெற்று முடிந்த போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

**ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகளின் முடிவுகள்**

| நிகழ்ச்சி | நிலை | பெயர் | பிரதேச செயலர் பரிவு |
|---|---|---|---|
| குண்டெறிதல் | 1ஆம் இடம்- | மா.பிரதீப்குமார் | சாவகச்சேரி |
| | 2ஆம் இடம்- | அ.சந்திரமோகன் | கரவெட்டி |
| | 3ஆம் இடம்- | ச.சுதன் | தெல்லிப்பழை |
| 200 மீற்றர் | 1ஆம் இடம்- | ட.சாத்வீகன் | சண்டிலிப்பாய் |
| | 2ஆம் இடம்- | ட.தெய்வீகன் | சண்டிலிப்பாய் |
| | 3ஆம் இடம்- | பி.தினேஸ்குமார் | பருத்தித்துறை |
| நீளம் பாய்தல் | 1ஆம் இடம்- | இ.ரஞ்சித்குமார் | தெல்லிப்பழை |
| | 2ஆம் இடம்- | சி.மஞ்சீவன் | பருத்தித்துறை |
| | 3ஆம் இடம்- | த.பகீதரன் | சங்கானை |
| 110 மீ.தடைதாண்டல் | 1ஆம் இடம்- | இ.ரஞ்சித்குமார் | தெல்லிப்பழை |
| | 2ஆம் இடம்- | எம்.சஞ்சீவ் | யாழ்ப்பாணம் |
| | 3ஆம் இடம்- | பொ.கிருபானந்தன் | சண்டிலிப்பாய் |
| தட்டெறிதல் | 1ஆம் இடம்- | இ.உதயகுமார் | கரவெட்டி |
| | 2ஆம் இடம்- | ச.சுதன் | தெல்லிப்பளை |
| | 3ஆம் இடம்- | பூ.முகுந்தன் | யாழ்ப்பாணம் |
| 1500 மீற்றர் | 1ஆம் இடம்- | ந.காந்தரூபன் | சண்டிலிப்பாய் |
| | 2ஆம் இடம்- | ஜெ.ஜெயதாஸ் | யாழ்ப்பாணம் |
| | 3ஆம் இடம்- | து.துஷன் | கோப்பாய் |
| உயரம்பாய்தல் | 1ஆம் இடம்- | என்.கிசோக்குமார் | கோப்பாய் |
| | 2ஆம் இடம்- | சி.விஜயகுமார் | நல்லூர் |
| | 3ஆம் இடம்- | எஸ்.ரஜீவன் | சண்டிலிப்பாய் |
| 4x100 மீற்றர் அஞ்சல் | 1ஆம் இடம்- | சண்டிலிப்பாய் அணியினர் | |
| | 2ஆம் இடம்- | தெல்லிப்பளை அணியினர் | |
| | 3ஆம் இடம்- | பருத்தித்துறை அணியினர் | |
| 4x400 மீற்றர் அஞ்சல் | 1ஆம் இடம்- | சண்டிலிப்பாய் அணியினர் | |
| | 2ஆம் இடம்- | பருத்தித்துறை அணியினர் | |
| | 3ஆம் இடம்- | தெல்லிப்பளை அணியினர் | |

**பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகளின் முடிவுகள் நாளை வெளி வரும்**



மோட்டார் காரோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் தனது காரில் சுற்றிச் சுழலும் ரொனி கனான்.

# ட்ராவிட்டின் திறமைக்குச் சான்று பகரும் சௌரவ் கங்குலி

துடுபபாட்டம், பந்துக்காப்பு ஆகிய இரு பணிகளையும் செய்வதில் மிகச் சிறந்தவர் ட்ராவிட் தான் என்று கட்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

தேர்வுக்குழுத் தலைவர் கிர்மானியின் கருத்துக்கு மாறாக இது



அமைந்துள்ளது.

பநதுக்காப்பாளராகவும் ட்ராவிட் செயற்படுவதால் அணியின் துடுப்பாட்டம் வலுவடைந்துள்ளது. ட்ராவிட் அளவுக்கு இரு பணிகளையும் செய்யும் வீரர் கிடைக்கும்போது, வேண்டுமானால், பந்துக்காப்பாளர் பணியிலிருந்து ட்ராவிட் விடுவிப்பது குறித்து யோசிக்கலாம்.

டெஸ்ட் போட்டிகளில் தொடக்க ஆட்டக்காரராக விளையாடும் திறன் யுவ்ராஜ் சிங்குக்கு இருக்கிறது. இவ்வளவு திறமை பெற்றிருக்கும யுவ்ராஜை, அணியில் சேர்க்காமல் விடடுவிடக்கூடாது. ஏராளமான ஆட்டங்களை இந்தியாவுக்கு வென்று தந்துள்ளார் அவர்.

ஒருநாள் கிரிக்கெற்றில் தொடக்க ஆட்டக்காரர்களாக நான், சச்சின், சேவாக் ஆகியோரில் இருவர் விளையாடி வருகிறோம். எங்களது திறமைகள் உள்பட பல்வேறு அம்சங்களை மனதில் கொணடு தொடக்க ஆட்டக்காரர்களை முடிவு செய்வோம்.

இனி தொடர்ந்து முக்கியமான போடடிகள் வரவிருக்கின்றன. அவுஸ்திரேலியாவுடன் 4டெஸ்ட் ஆட்டங்களும் தென்னாபிரிக்காவுடன் 2 டெஸ்ட் ஆட்டங்களும் உள்ளன. மேலும் ஐ.சி.சி.மினி உலகக் கோப்பைப் போட்டி கொலணடில் நடைபெறவுள்ளது. ஆசியக்கோபபை போட்டியிலும் விளையாடவுள்ளோம். அதற்குத் தேவையான தகுதியைப் பெறுவதற்காகத்தான் பெங்களூரில் முகாம் நடத்தப்படுகிறது.

அணியின் பெரும்பாலான ஆட்டக்காரர்கள், தங்களது மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த போக்கு அடுத்த 34ஆண்டுகளுக்குத் தொடரும் என நம்புகிறேன் என்று அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

# போர்த்துக்கல் பொலிஸார் இங்கிலாந்து இரசிகர்கள் மோதல்

[illegible]ர்த்துக்[illegible] நலைநகர் லிஸ் [illegible]பொலி[illegible]நக்கும் இங்கி[illegible]கர்[illegible]கும் இடையே [illegible]ற்ப[illegible] [illegible]மாதம[illegible] தொடர்ந்து [illegible] பொலிஸார் பிடித்[illegible]துள்ளனர்.

[illegible], இங்கிலாந்து அணிகளு[illegible] இடையிலான ஐரோப்பிய கோப்பை கால்பந்து லீக் ஆட்டம் [illegible] [illegible]கிழமை நடைபெறுவதையொட்டி பெரும் திரளான இங்கிலாந்து ரசிகர்கள் ரோசியோ சதுக்கம் என்ற இடத்தில் திரண்டிருந்தனர்.

அப்போது அப்பகுதியில் போக்குவரத்தை அவர்கள் நிறுத்தியுள்ளனர். இதைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. கலவரத் தடுப்பு பொலிஸார் அப்பகுதிக்குசசென்று பலரைக் கைதுசெய்து, போக்குவரத்தைச் சீர்செய்தனர்.

பின்னர், இங்கிலாந்து ரசிகர்களுக்கும் போர்த்துக்கல் குழுவினருக்கும் மோதல் ஏற்பட்டது. பஸ்ஸல்வந்த போர்த்துக்கல் குழு மீது கையில் கிடைத்ததையெல்லாம் எறிந்தனர் இங்கிலாந்து ரசிகர்கள். அந்த பஸ்ஸில் குழந்தைகளும் இருந்தனர். பின்னர் பொலிஸார் தலையிட்டு சமரசம் செய்தனர்.

(உ)

# மெய்வல்லுநர் போட்டிகளில் எட்டு புதிய சாதனைகள்

கடந்த 2ஆம் திகதியும் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட பிரதேச செயலர்பிரிவுகளுக்கிடையிலான மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளில் 8புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

இதில் 5சாதனைகள் ஆண்கள் பிரிவு நிகழ்ச்சிகளிலும், மூன்று சாதனைகள் பெண்கள் பிரிவு நிகழ்ச்சிகளிலும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இந்த புதிய சாதனைகள் பற்றிய விபரங்கள் வருமாறு,

800மீற்றர் ஓட்டம், குண்டெறிதல், 110மீற்றர் தடைதாண்டல், தட்டெறிதல், 400மீற்றர் தடைதாண்டல் ஆகியவற்றில் ஆண்களும் 100 மீற்றர் தடைதாண்டல், ஆயிரத்து 500மீற்றர் ஓட்டம், ஈட்டியொறிதல் ஆகியவற்றில் பெண்களும் இச் சாதனைகளைப் படைத்துள்ளனர்.

(உ-68)

# விளையாட்டுச் செய்திகள்



ஹோப்ரவுன் கிண்ண விளையாட்டுப் போட்டியில் அவுஸ்திரேலியவைச் சேர்ந்த வின்டல் செயிலர் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஹியு,கோசவுத்வெல்லிடமிருந்து பந்தைக் கைப்பற்றும் முயற்சியில்.

## ஒலிம்பிக் வரலாறு ⑧

# 1924ல் நெதர்லாந்து நகரில் இடம்பெற்ற 8வது ஒலிம்பிக்

1924ஆம் ஆண்டு நடைபெற்ற 8வது ஒலிம்பிக் போட்டி 1924ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ் டடார்மில் நடைபெறவிருந்தது. ஆனால சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலின் தலைவர் அவர்களின் விருப்பப்படி பிரான்ஸின் தலை நகர் பாரிஸில் நடைபெற்றது.

இந்த 8வது ஒலிம்பிக் போட்டியானது சுமார் ஒரு மாதமும் 25 நாட்களும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஒலிம்பிக் போட்டியில் தான் இறுதி நிகழ்வில் மூன்று கொடிகள் ஏற்றிவைக்கப்படும் வழக்கம் ஆரம்பமானது. அதாவது ஒலிம்பிக்கொடி, போடடியை நடாத்தும் நாட்டின் கொடி அடுத்து ஒலிம்பிக் போடடியை ஏற்று நடாத்தும் நாட்டின் கொடி எனபன ஏற்றி வைப்படும் முறை.

பாரிஸில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக் போட்டியில் 44நாடுகளைச் சேர்ந்த 3089போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் முதன்முதலாக கறுப்பினத்தவர் ஒருவர் முதலாவது தங்கப் பதக்கம் பெற்றமை ஆகும்.

அத்துடன் சுமார் ஆயிரம் பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஜொனிவிஸ் மூலர் என்பவர் இப் போட்டிகளில் இரண்டு தங்கம். மற்றும் ஒரு வெண்கலபப்பதக்கங்கள் வென்றார். அதன்பிறகு இவரது உடல வண்மையைப் பார்த்த ஹொலிவூட் உலகம் இவரை (1932ஆம் ஆண்டுக்குப்பிறகு அரவனைத்துக்கொணடது. இவர் 12ஹொலிவூட் [illegible]ங்களில் நடித்தமை குறிப்பிடத்தக்கது.)

# குழந்தை உளவியல் சிந்தனைகள்

"நரகத்தைச் சொர்க்கமாகவும், சொர்க்கத்தை நரகமாகவும் மாற்றுவது மனமே'' என்ற மாபெரும் கவிஞர் மில்டனின் கூற்



றுக்கிணங்க நம்செயல்கள் யாவற்றிற்கும் மூல காரணமாக மனம் அமைகினறது என்பது வெள்ளிடைமலை.

இன்றைய நெருக்கடியான அவசரமான விஞ்ஞான கணனி யுகத்தில் மனத்தோடு தொடர்புடைய உளவியல் சிந்தனைகள் முக்கியமாகத் தேவைப்படுவதொன்றாகும். குறிப்பாக வீரம்-செறிந்த, அறிவு சார்ந்த சமுதாய உருவாக்கத்தில் குழந்தை உளவியல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

பிராய்ட் எனும் உளவியல் அறிஞரின உளபகுட்பு ஆய்வுகளின் படி உள்ளமானது நனவு நிலை உள்ளம் **(Conscious mind)**, நனவடி - உள்ளம் **(Sub Concious mind)**, நனவிலி உள்ளம் **(Un Concsious mind)** என மூன்றாகப் பகுக்கப்படுகின்றது.

நாள்தோறும் இடம்பெறும் அனுபவங்கள் நனவு நிலையில் கொள்ளப்படுகின்றன. இவை இலகுவில் ஞாபகமூட்டக் கூடியதாயுள்ளது. நாளாந்த வாழ்வில் இடம் பெறும் எண்ணங்கள் நாளடைவில் நனவிலி உள்ளத்தை அடைகின்றன. ஒரு மனிதனது நிறைவேறாத ஆசைகள் சமூகவிரோத உணர்வுகள் நனவடி உள்ளத்தில் அடக்கி வைக்கப்படுகின்றன.

குழந்தை உளவியலில் இக் கருத்தை ஆராயும் போது ஒரு குழந்தை இன்பம் அடைவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்றும் பிராய்ட் கூறினார். இவ் வகையில் நனவடி உள்ளத்தில் சேர்க்கப்படும். உணர்வுகளே பிற் காலத்தில் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருக்கின்றன.

உளவியல் பண்பியல் தொகுப்பாய்வின்படி இத் **(Id) (Pleasure Principle)**, ஈகோ **(Ego) (Reality Principle)**, சுப்பர் ஈகோ **(Super Ego) (Moral Principle)** என மூன்று அடிப்படை நிலையில் பண்பியல் தொகுப்பு ஆராயப்படுகின்றது. இதில் 'இத்' ஆனது இன்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பிடிவாதம் நிறைந்தது. குழந்தைப் பருவத்தில் 'இத்'தின் செல்வாக்கு அதிகளவில்

## மருத்துவ விளக்கம்

காணப்படுகின்றது. சுப்பர் ஈகோ நீதியையே குறிக்கோளாகக் கொண்டது. இன்பத்தைக் குறிக்கோளாகக் கொண்ட 'இத்' இற்கும் நீதியைக் குறிக்கோளாகக் கொண்ட சூப்பர் ஈகோ இற்கும் இடை நிலையாக 'ஈகோ' செயற்படுகின்றது. ஈகோ **(Ego)** ஆனது 'இத்' **(Id)** ஐ சமாதானப் படுத்துவதில் பிரதான பங்கு வகிக்கின்றது. ஈகோ பூரண வளர்ச்சயடையாவிடில் 'இத்' ஆனது ஈகோவின் மீது ஆதிக்கத்தைச் செலுத்தி உளரீதியான மன விகற்பங்களை உண்டு பண்ணும்.

### பெற்றோரின் பங்கு

குழந்தை உளவியல் சிந்தனைகளில் பெற்றோரது பங்கு முக்கியம் வாய்ந்தது. பெற்றோரது அன்புணர்வு, ஊக்கப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் குழந்தையின் உளவியல் ரீதியான வளர்ச்சியில் பெரும் பங்குவகிக்கின்றன. விளையாட்டுக்கள் குழந்தையின் உள நிலையையும், உடல் நிலையையும் உற்சாகமூட்வனவாக அமைகின்றன. மேலும் பேய், பிசாசு என்று குழந்தைகளை பயமுறுத்தல் பலவகைப்பட்ட உளவியல் சிக்கல்கள் உருவாவதற்குக் காரணமாயிருக்கின்றன.

பெற்றோர்கள் குழந்தைகளைக கேலி செய்தல், பயமுறுத்தல், தண்டனை வழங்கல், அளவுக்கதிகமான பரிவு கொடுத்தல் ஆகியன குழந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எப்பொழுதும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் குழந்தை வளரும் சூழ்நிலையில் இருப்பவர்களால் அடிக்கடி குறை சொல்லப்படும் சூழ்நிலையில் வளர்க்கப்படும் குழந்தைகள், மற்றவர்களை குறை சொல்வதில் இன்பம் காணுவதை அவதானிக்கலாம்.

விரோத மனப்பான்மை சூழலில் குழந்தை வளர்க்கப்படும் போது ஏனையவர்களோடு சண்டை போடும் குணம் படைத்ததாக வளருவதைக் காணலாம். நட்புணர்வு சூழ்நிலையில் வளர்க்கப்படும் குழந்தை உலகமே அன்பு மயமாக இருப்பதாக சந்தோஷத்துடன் வளரும்.

ஏனையவர்களது ஏளனத்திற்கு ஆளாகும் குழந்தையில் எப்போதும் ஒரு கூச்ச சுபாவத்துடன் ஒதுங்கி வாழ்கின்ற நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது. பாராட்டப்படுகின்ற சூழ்நிலையிலே வளர்த்தெடுக்கப்படும் குழந்தை



யானது நல்லவற்றைப் போற்றுகின்ற உயரிய குணம் கொண்டதாக வளர்வதைக் காணலாம்.

### அறிவாற்றல் வளர

குழந்தையானது புதிய சூழலுக்கு அறிமுகமாவதால் ஒவ்வொன்றையும் ஏன் எப்படி என்று கேட்கும். இதைப் பெற்றோர்கள் தடைசெய்யக்கூடாது. கேள்விகளூடாகத் தனது அறிவாற்றலை குழந்தை வளர்க்க முயற்சிக்கின்றது. முதலாவதாகப் பிறந்த குழந்தையிலும் இரண்டாவதாகப் பிறந்த குழந்தையானது எல்லாக் காரியங்களிலும் விரைவாகச் செய்யும். முதலாம் பிள்ளையைப் பார்த்து அது செய்வதைத் தானும் செய்யவேண்டும் என்று செய்வதால் விரைவாகச் செய்யும்.

குழந்தைகளுக்கு பொம்மைகள், விளையாட்டுப் பொருட்களைக் கொடுக்கும் போது அவற்றை குழந்தை கழற்றிப்பார்க்கும் போது பெற்றோர்கள் சினமடைகின்றனர். ஆனால் பெற்றோர்கள் சினமடையாது அவ்வாறு குழந்தை செய்வதை அனுமதிக்கவேண்டும். கழற்றிய பொம்மையை திருப்பிப் பொருத்தக் குழந்தை முயற்சிக்கும். இவ்வாறு முயற்சிப்பதனால் அறிவுத்திறன் அதிகரிக்கும். பெற்றோர்கள் அல்லது பாட்டிமார் கூடுதலான நேரம் பிள்ளையுடன் இருந்தால் பிள்ளை அவர்கள் கதைப்பதைப் பார்த்து விரைவாகக் கதைக்கத் தொடங்கும். குழந்தையானது முதலில் கிரகித்து பின்னர்தான் பேச ஆரம்பிக்கும். தாய் குழந்தையுடன் தெளிவாக அதிக நேரம் கதைக்க வேண்டும். தாய் பிள்ளையோடு எவ்வளவு அதிகமாகக் கதைக்கின்றாரோ அவ்வளவுதூரம் கிரகித்தல் கூடும். குழந்தைகள் நாம் கதைப்பதை திருப்பிச் சொல்ல முயற்சிப்பதனால் தீய கடின சொற்களை குழந்தைகளுக்கு முன்பாக வளர்ந்தவர்கள் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

### உளவியல் பிரச்சினையின் வெளிப்பாடு

ஒரு குறித்த வயதிற்கு மேற்பட்ட சிறுவர்கள், விரல் சுவைத்தல், நகம் கடித்தல், நித்திரையில் நடத்தல், படுக்கையில் சிறுநீர் கழித்தல், சமூகத்திலிருந்து அசாதாரணமாக ஒதுங்குதல் ஆகியன உளவியல் பிரச்சினை வெளியீட்டின் குறியீடாக அமையலாம். சிறுவர்கள் நகம் கடித்தலானது உளவியல் சார்ந்த ஒடுக்கு முறைகளாலும், மன இறுக்கத்தாலும் ஏற்படக்கூடியதொன்றாகும். பதற்றம், பாதுகாப்பின்மை முதலிய சூழ்நிலைகளிலும் நகத்தைக் கடிப்பதன் மூலம் மன அழுத்தத்தைக்

டாக்டர் [illegible]
தெல்லிப்பளை

குறைத்துக் கொள்கின்றனர். ஒடுக்கு முறை அல்லது அடக்கு முறை அனுபவங்கள் ஆழ்மனதின் நெருடலாக அமைய நகம் கடிக்கின்றோம் என்ற உணர்வின்றியே நகம் கடிக்கும் நிலை காணப்படுகின்றது.

மகிழ்ச்சியின்மை, மன இறுக்கம், தாய்ப்பால் அருந்த இயலாத குழந்தைகள், தவறான பாலூட்டும் முறைகள், தவறான குழந்தைப் பராமரிப்பு, பெற்றோரது அன்பு கிடைக்காமை, பாதுகாப்பின்மை, பதற்றம் ஆகிய காரணிகள் குழந்தைகள் விரல் சூப்புவதற்கு உளவியல் காரணமாக அமைகினறன. மேலும் பிறரது கவனத்தைத் தன் பால் ஈர்க்கும் முகமாகவும் குழந்தைகள் விரலை சூப்புகினறன. குழந்தைக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் உபாயத்தைப் பயன்படுத்தி விரல் சுவைத்தலை நிற்பாட்ட முயலவேண்டுமேயொழிய மேலும் உளப்பிரச்சினையைக் கூட்டி நிலைமையை மோசமாக்கலாம்.

உடல் நோயற்ற நிலையில் குழந்தை திடீரென நித்திரைவிட்டெழுந்து கதறி அழுதலானது பயங்கரக்கனவு, பயம், பாதுகாப்பின்மை உணர்வு ஆகிய உளப் பிரச்சனைகளின் குறியீடாக அமைகின்றது. உடல் சார்ந்த நோயில்லா நிலையில் குழந்தை உண்ணமறுப்பது கவன ஈர்ப்பு, மன இறுக்கம், பயம் ஆகிய உளவியல் பிரச்சினைகளின் அறிகுறியாக அமைகின்றது.

# வாழ்வுரிமைகளை நிலைநாட்ட போராடியே தீரவேண்டும்

## வி. நு. கூ. ச. சமாசம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் கூர்மை அடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில், எமது வாழ்வுரிமைகளை நிலைநாட்ட நாம் போராடித்தான் தீரவேண்டும்.

5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை மறுதினம் பொது அமைப்புக்களின் ஒன்றிய ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கண்டனப்பேரணி குறித்து யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், போர் நிறுத்தம், புரிந்துணர்வு உடனபாடு போன்ற ஆக்கபூர்வமான செயற்திட்டங்களைப் புறந்தள்ளி சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களைக் குலைப்பதற்கே புதிதாகப் பதவியேற்றுள்ள ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் முயற்சிகள் மேற்கொணடு வருகின்றனர் என்பது இன்று வெளிப்படையாகத் தெரிகின்றது.

இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிக்க தமிழ் மக்களின் நீண்ட காலப் போரை முடிவுறுத்தி அரசியல் தீர்வொன்றைக்காண புதிய அரசு முயற்சிப்பது போலக் காட்டிக்கொள்கிறதே தவிர உண்மையில் அவ்வாறு நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. இதனை வெறுமனே நாம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

இன்று பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு சமாதான முயற்சிகளைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். போர் நெருக்கடியின் போது கூட்டுறவாளர்கள் தமது உயிரைப் பணயம் வைத்து பல்வேறு காலகட்டங்களில் மக்களுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கூட்டுறவாளர்கள் பணிபுரிந்திருக்கிறார்கள்.

இவர்களுக்காக சிங்கள ஆட்சியாளர்கள் எதுவித நன்மையும் செய்யவில்லை. நிச்சயமாக விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை கையளிக்கப்பட்டால் அதன் மூலம் கூட்டுறவுச் சமூகம் பெரிதும் பயனடையும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

5 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் வியாழக் கிழமை இயல்வு வாழ்வைத் தோற்றுவிக்க மறுக்கும் ஸ்ரீலங்கா அரசை கண்டித்துப் பேரணி நடைபெறுகிறது. இதில் கூட்டுறவாளர் பலத்தை நிருபிக்க அணி திரள்வோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### களஞ்சியசாலைக்குச் சீல்வைப்பு

பொதி செய்த உணவுப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து உள்ளூரில் சந்தைப்படுத்தி வந்த பிரபல கம்பனி ஒன்றின் களஞ்சியசாலையைப் பொலிஸார் சீல் வைத்துள்ளனர்.

மேற்படி களஞ்சியசாலை நேற்று முன்தினம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுக் காலாவதியான பெருந்தொகைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. கொழும்பு வடக்கில் உள்ள களஞ்சியசாலையில் மேற்படி கம்பனியானது கலாவதியான உணவுப் பொருட்களைத திகதி மாற்றம் செய்து விநியோகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், திகதிமாற்றம் செய்து அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படாது மீள அனுப்பப்படும் போது மீண்டும் திகதி மாற்றம் செய்து சநதைக்கு அனுப்பப்பட்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)


உலக சுற்றுச் சூழல் தினம் ஜுன் –05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழம்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

சராசரிக் கடல்மட்டம் கடந்த 100 வருடங்களில் 10 தொடங்கி 25 சதம் மீற்றர்களால் உயர்ந்துள்ளது. உலகின் பனிக்கட்டிகள் உருகுமானால் சமுத்திரங்கள் 66 மீற்றர்களால் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆன்மீக எழுச்சிக்கு வித்திட்ட

# 'சின்மயா இளைஞர் முகாம்'

இலங்கை சின்மயாமிஷன் ஸ்தாபனத்தாரால் கடந்த மே மாதம் 15.20.2004-5.5.2004 வரை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இளைஞர்களுக்



கான ஆன்மீக முகாம் ஒன்று நடைபெற்றது. இம் முகாம் பற் பல சுவைமிகு அம்சங்களு டன ஆன்மகத்தினை இளைஞர் களிடையே வளர்க்கும் நோக் கில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந் தது. 'U' **Turn** என்பது இம் முகாமின்மையக் கருத்தாக அமைந்தது. உன்னைத் திருத் திகொள் உலகம் தன்னால் திருந்திக் கொள்ளும். இத னையே **'U'Turn** குறிக்கிறது. இதனைச சாதிப்பது, ஆளுமையை வளர்ப்பது, பூரணமடைவது எவ்வாறு என்பதை அறியவைப் பதற்கு இளைஞர்கள் வழி நடத்தப் பட்டார்கள்.

இம் முகாமின் முக்கிய அம்சங் களாகக் காலையில் தியானம் **'U' Turn** கருத்தரங்கு, பயிற்சிப் படடறை வினாவிடைப் போட்டி, பஜனை, சத்தங்கம்.,கலை நிகழ்ச்சி ஆகியன அமைந்திருந்தன. முகாமை வழிநடத்தும் ஆச்சாரி யாராக இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரம்மச்சாரி ரமண சைதன்யா சுவாமி அவர் கள் பொறுப் பேற்றிருந்தாகள். இளைஞர்களிடையே அகமலாச் சியை ஏற்படுத்திவரும் இவர், சின்மயாமிஷன் சாந்தீபனீ ஆச்சிரமத்தில் இந்து சமய சாஸ்திரங்களை ஆழமாகக் கற றுத் தெரிந்தவர். அது மட்டுமல் லாமல் அவற்றை இலகுத் தமி ழில் எடுத்தியம்பும் வல்ல மையும் ஒருங்கே உடையவர்.

இம் முகாமின் நடுநாயகமாக **'U'Turn** கருத்தரங்கு விளங்கி யது. சுவாமிஜி அவர்கள் **'U' Turn** கருத்தரங்கில் ஆளுமையை மேம்படுத்தல, புலனடக்கம், மனத் தைப் புத்தியினால் கட்டுப்படுத தல் முதலியன பற்றி தமது கருத்துரையை உகந்த உதார ணங்களுடன் நகைச்சுவையும் கலந்து சுவைபடக் கூறினார்.

இம் முகாம் மிகவும் கலகலப் பானதாகவும் விறுவிறுப்பான தாகவும் அமைந்து காணப் பட்டது.

இலங்கையின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் இருந்து இளை ஞர்,யுவதிகள் சுமார் 350 பேர் வரை கலந்து கொண்டார்கள். மிகவும் ஒழுங்கான முறையில் அவர்கள் ஆச்சாரியாரினால் வழி நடத்தப்பட்டார்கள். சின்மயா யுவ கேந்திராவினைச்சேர்ந்த இளை ஞர்கள் முகாமிற்கு வேண்டிய அனைத்துச் செயலபாடுகளையும் மிகவும் சுறுசுறுப்பாக ஒழுங்கு படுத்தினார்கள். சாதாரணமாக இளைஞர், யுவதிகளை ஒன்றாகப் பராமரிப்பது மிகவும் சிரமமான காரியமாகும். ஆனால இவர் களோ தமது பணியைச் செவ் வனே செய்தார்கள். இவர்க ளின் பணி போற்றுதற்குரியது.

இப் பயிற்சிப் பட்டறையினை இந்தியாவில் இருந்து வருகை தநத பாரிவள்ளல் அவர்கள் நடத்



தினார்.இவர் இதுபோன்ற பயிற்சிப் பட்டறைகள் பல நடத்தி வெற்றியீட்டியவர். பல கேள்விகள் கேட்டு இளைஞர் களின் ஆழ்மனதை சிந்திக்க வைத்தார்.வாழ்க்கைக்குத் தேவை யான சிறந்த உயரிய கருத்துக் களை அழகாக,ஆழமாக எடுத் துக் கூறினார்.வாழ்க்கையில் வெற்றியடைவது எப்படி? முயன் றால் முடியாதது எதுவும் இல்லை. வாழ்க்கையின் நோக்கம் என்ன? என்பன பற்றி சுவைபடக கூற னார்.

முகாமின் நிறைவு நாளன்று குருதேவா சுவாமி சின்மயா னந்தா அவர்களின் பாதபூஜை இடம்பெற்றது. குருதேவரின் ஆசியுடன் இம்முகாமானது இனிதே நிறைவடையும் கட் டத்தை அடைந்தது. பின்னர், ஐயம் தெளிதலின் ஊடாக முகா மில் கலந்துகொண்ட அனைவரி னதும் சந்தேகங்கள், கேள்விக ளுக்கு சுவாமிஜிரமண சைதன் யா அவர்கள் மிக அழகாகப் பதிலிறுத்தார்.

இம முகாம் இளைஞர்களி டையே ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தியதோடு மட்டுமல் லாது, அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு நல்ல தொரு களத்தினையும் அமைத் துக் கொடுத்தது.கலை நிகழ் வுகளின் போது இதனைத் தெளி வாகக் காணக்கூடயதாக இருந் தது.

தற்போதைய சூழ்நிலையில இவ்வாறான ஆன்மீக முகாம நடைபெறுவது மிக அவசியமான தாகும். ஏனெனின் இப்போது இந்து மதத்தின் உள்பொருளை யும் அதன் ஆழமான நுட்பமான தன்மையையும் உணராத மக் கள் பிற மதத்தின் பால் ஈர்க்கப் படுகிறார்கள். இது தடுத்து நிறுத் தபபட வேண்டும்.அன்று சுவாமி விவேகானந்தர் கூறியது போல எமது இந்து மதத்தின் பெரு மையை உலகறிய முழங்க வேண டும். இந்து மதத்தை குறை கூறித் தூற்றும் மூடர்களைத் திருத்த வேண்டும். எமது சமயத்தை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றையும் ஒரு முகமாக அள்ளி வழங்க சின்ம யாமிஷன் காத்திருக் கின்றது. இறைபணி மட்டுமல்லாது கல்வி, சமூக மற்றும் இன்னும்பல அரிய சமுதாய மறுமலர்ச்சி பணி களையும் உகலச் சின் மயாமி

**நிவேதிகா**
**நல்லூர்**

ஷன் ஆற்றிவருகிறது. இவ் அரிய ஆன்மீக சேவையை நாம் பெற்றுப் பயன்படுத்தி பண்பட்டு நிலையான ஆனந் தத்தை நோக்கிச்செல்வோ மாக.

ஹரி ஓம

# நாட்டைக் கூறுபோடும் முயற்சியை தோற்கடிக்கத் தயார் – ஹெல உறுமய

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாட்டை பலி கொடுக் கும் முயற்சிகளை தோற்கடிப் பதற்குத் தயாரென்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள ளது.

இடைக்கால சுயாட்சி நிலைப் பாட்டின் கீழ் விடுதலைப் புலி கள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகி வருவது குறித்து கருத்து வெளி யிட்ட ஜாதிக ஹெல உறுமய வின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவெல மேதானந்த தேரர்,

வடக்கு - கிழக்கு சுயாட்சி அதி கார சபைக்கான யோசனைகள முன்வைக்கப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடு தலை முன்னணி யும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை தற் போது மறந்து போயுள்ளன.

ஐக்கிய தேசியக் கடசியின் தேசத்துரோகமான வேலைத் திட்டங்களையே தற்போது ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு அரசாங்கமும் முன் னெடுத் துச் செல்கிறது என தெரி வித் துள்ளார். (உ)

## அணி ஒழுங்கு தெரிவு

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக்கத் தினால் நடாத்தப்பட்டுவருகின்ற கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ண கிரிக்கெற் சுற்றுப் போட டிககான அணி ஒழுங்குத் தெரிவு நாளை 16 அம் திகதி புதன் கிழமை மாலை 5.00 மணிக்கு நிலைய மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம்திகதி தொடக் கம் போட்டிகள் நடைபெறுவது டன், யாழ்.மாவட்டத் துடுப்பாட டச் சங்கத்தில் பதிவு செய்தவிளை யாட்டுக் கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கலந்துரையாடல்

இன்று மு.ப.10.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் திட்டமி டலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் வடக்கு-கிழக்கில பணியாற்றும் அனைத்து சர்வ தேச அரசசார் பற்ற நிறுவனங்க ளுககும் ஐ.நாமுகவர் அமைப்பு களுக்குமான கலந் துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்செல்வன் கலந்து கொள்ளும் இச்சந்திப்பில் வட கது-கிழக்கில் புனர்வாழ்வு, புனர மைப்பு, மீள்கட்டுமாணம் மற்றும அபிவிருத்தி செயல்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித் தும் எதிர்கால செயற்பாட்டு வரை முறைகள் குறித்தும கலந்து ரையாடபபடவுள்ளது. (உ)

# 20 ஆயிரம் பேர் வடகிழக்கு மாகாணத்தில் காணாமல் போயுள்ளனராம்

(வவுனியா)

இனப் பிரச்சினை காரணமாக வடக்கு- கிழக்குப் பிரதேசங்களி லிருந்து 20 ஆயிரம் பேர் இது வரையும் காணாமல் போயுள்ள தாக போரினால் பாதிக்கப்பட்ட பெணகளின் சங்கம் தெரிவித் துள்ளது.

வவுனியா நகர சபை மண்ட பத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற கூட்டத்தில் சங்கத்தின் தலைவி விசாக்கா தர்மதாஸ இத் தகவலை வெளியிட்டுள் ளார்.

இலங்கையில் நடைபெற்ற போர் காரணமாக இனம்,மதம் மொழிக்கு அப்பால் அனைத் துப் பெண்களும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலும் தமது கணவன் பிள்ளைகள் உயி ருடன் இருக்கிறார்களா இல் லையா என்பது குறித்து தெரியா துள்ளதாகவும் அவர் தெரிவித் தார்.

காணாமல் போனவர்களின் விடயம் குறித்து அரசோ,விடுத லைப்புலிகளோ நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை எனவும் அவர் குற்றஞ் சாட்டிய துடன்,

உயிருடன் சிறைகளில் இருப் பவர்கள் அனைவரும் விடுதலை யாக நடவடிக்கை எடுக்கவேண டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இக் கூட்டத்தில் முப்படைக ளையும் சேர்ந்த அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் காணா மல்போனோர் சங்க உறுப்பினர் கள் எனப் பலரும் கலந்து கொண டனர். (ச)

# பாராளுமன்றத்தில் அமளிதுமளி ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தி

(கொழும்பு)

கடந்த செவ்வாய்க்கிழமை



பாராளுமன்றததில் நடை பெற்ற அசம் பாவிதம் குறித்து ஜனாதிபதி தனது கண்டனத்தை யும அதிருப்தியையும் தெரிவித்துள் ளார்.

கடந்த புதன்கிழமை ஜனா திபதி தலைமையில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட் டத்தில் பாராளுமன்றத்தில் நடை பெற்ற அமளிதுமளி குறித்து ஆராயப்பட்டபோதே ஜனாதிபதி தனது அதிருப்தியைத தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அமளி துமளி நடந்த வேளையில் ஐக்கிய தேசிய கட்சி உட்பட பல எம்.பிக கள் நடந்து கொண்டமுறை கவ லையளிக்கிறது. இந்த அம ளிதுமளியை சபாநாயகர் தவிர்த் துக் கொண்டிருக்கலாம். எதிர் காலத்தில் ஆளும் கட்சி உறுப் பினர்களின் நடத்தை குறித் தும முக்கிய அவதானம் செலுத்தப் பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# சமுக அபிவிருத்தி மன்றம் இலகு வட்டியுடன் கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி வீதியை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சமூக அபிவிருத்தி மன்றத்தின் கீழ் இயங்கும் 125 சேமிப்புக் கழகங்களில் தற் போது 56 கழகங்கள் மட்டுமே இயங்கிவருவதாக மன்றத்தின் தலைவர் எஸ்.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது இயங்கிவரும் 56 கழகங்கள் மூலமாக அந்தக் கிராமங்களில் அபிவிருத்திக் கடன் பெறுபவர்களுக்கு வருமா னம் ஈட்டப்படும் திட்டக் கடன் வசதி இலகு வட்டியுடன் வழங் கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இன்னும் இயங் காதிருக்கும் 69 கழகங்களையும் புனரமைப்புச் செய்து இயக்கு வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் நடவடிக்கை மற் றும் இடப்பெயர்வு காரணமாக சேமிப்பு கழகத்தின் பதிவேடு கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங் கள் தொலைந்து போனதன் காரணமாகவே இக்கழகங்கள் செயற்படமுடியாதிருக்கின்றன என்றும் அவர் மேலும் கூறி னார்.

சமூக அபிவிருத்தி மன்றம் கிராமிய மட்டத்தில் பெண் களின் சுயதொழில் வாய்ப்புக கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் முக் கிய பெண்ணிய அமைப்பு என் பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-16)

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் ரகசியம்

சில பேருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக அமையும். சிலபேருக்குத் தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும். இதில் உள்ள ரகசியம் என்ன? அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் இந்தக் கதையைக் கேளுங்கள்.

ஜப்பானில் ஒரு பெரிய வீரர் இருந்தார். அவரது பெயர் நெபுநாகா! அவரிடம் இருந்த படைவீரர்கள் கொஞ்சப்பேர்தான்.சிறிய படை பலத்தை வைத்துக் கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் முடித்திருக்கிறார் அவர். அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர்.

ஒருமுறை எதிரி மீது படையெடுத்துக்கொண்டு போயிருக்கிறார். அப்போது அவரது படைவீரர்களுக்கும் தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது. இந்தப் போரில் நாம் வெற்றி பெறமுடியுமா? என்ற சந்தேகம். இருந்தாலும் இதை எப்படித் தலைவரிடம் தெரிவிப்பது. மிகவும் யோசனை செய்தார்கள்.

இறுதியல் கொஞ்சம் துணிவை வரவழைத்துக் கொண்டு மெதுவாகக் கேட்டுவிட்டார்கள். அவரும் பார்த்தார் "சரி! அதை நாம் முடிவு செய்யவேண்டாம். புத்த விகாரைக்குப் போய்விட்டு வருவோம். பூவா தலையா கேட்டுப் பார்ப்போம் என்ன வருகின்றதோ அதனபடி செயல்படுவோம். ஏனென்றால் சண்டைக்குச் செல்லும் போது முழு மனதுடன் போகவேண்டும். ஊசலாட்டம் இருக்கக்கூடாது" என்றார். தளபதியும் படைவீரர்களும் "சரி" என்று ஒத்துக் கொண்டார்கள். உடனே அவர்கள் எல்லோரும் அங்கே பக்கத்தில் இருந்த கோவிலுக்குச் சென்றனர். தலைவர் உளளே சென்றார். எல்லோரும் ஆவலுடன் வெளியில் காத்துக்கொண்டிருந்தனர். நீண்ட நேரத்தின் பின் அவர் வெளியே வந்தார்.

தளபதி, துணைத்தளபதிகள் எல்லோரையும் அருகில் அழைத்தார். அவர்களின் முன்னிலையில் ஒரு தங்கக் காசை எடுத்தார். இதோ பாருங்கள் இப்போது பூவா தலையா போட்டுப்பார்க்கலாம். பூ வந்தால் தோற்றுவிடுவோம். தலை வந்தால் ஜெயித்துவிடுவோம். பூ விழுந்தால் போர் வேண்டாம். அதைத் தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்குப் போவோம். விதி இப்போது நமது கையில் தான் இருக்கிறது. இங்கே என்ன தீர்ப்புக்கிடைக்கின்றதோ அதன்படி நடப்போம்" என்று கூறிவிட்டு தங்கக் காசைச் சுண்டினார். அது சுழன்று மேலே போய் கணீரென்று தரையில் விழுந்தது. எல்லோரும் ஆவலுடன் அதைக்குனிந்து பார்த்தனர். தலை விழுந்திருந்தது.

ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். அதன் பின்பு அவர்களுக்குச் சந்தேகம் வரவில்லை. உறுதியான முடிவுடன் போருக்குச் சென்றார்கள். வெற்றியுடன் திரும்பி வந்தார்கள்.

வெற்றி விழா நடந்தது. தளபதி பேசினார். இந்த வெற்றியைக் காசுதான் முடிவு செய்தது. அதனால் விதியை வெல்ல யாரால் முடியும்? என்று கூறிவிட்டு அமர்ந்தார். அப்போது அந்தத் தலைவர் தன்னிடமிருந்த அந்தத் தங்கக் காசை எடுத்து ரகசியமாகத் தளபதியிடம் கொடுத்தார். தளபதி அதை வாங்கிப்பார்த்தார். அந்த நாணயத்தின் இரண்டு பக்கமும் தலை தான் இருந்ததாம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. வெற்றியின் ரகசியம் என்ன? மன உறுதி தான். எதைச் செய்தாலும் மனக்குழப்பம் இருக்கக்கூடாது. "எண்ணித்துணிக கருமம்" இது வள்ளுவர் வாக்கு.

பரீட்சை முடிவுகள் வரும் சமயம் ஒரு பையன் ஒரு காசைச் சுண்டிப்பார்த்தான். "என்ன...பாஸா பெயிலா என்று பார்க்கிறியா? " என்றேன். "பரீட்சை முடிவைப் பொறுத்தவரைக்கும் எனக்குச் சந்தேகமில்லை சார்" என்றான். அப்புறம் இது எதற்கு? என்றேன். முடிவு வந்த பின்பு என் அப்பா என்னைத் திட்டுவதோடு விட்டு விடுவாரா? இல்லை அடிப்பாரா என்பதைத் தெரிந்துகொள்ளத்தான் இது" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சமாதானப் புறா இறந்தது

பல்தேசிய படைத்துறைப் பயிற்சிப் பட்டறையின் போது அமைச்சர் இரட்ணசிறீ விக்கிரமநாயக்காவால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா கழுத்து முறிந்த நிலையில் இறந்து வீழ்ந்துள்ளது.

குக்குளு கங்கையில் உள்ள படையினரின் முகாமில் இடம்பெற்ற பல்தேசிய படையினர் கலந்து கொண்ட படைததுறைப் பயிற்சிப் பட்டறையில் அமெரிக்காவின் ஆசியப் பிராந்திய கட்டளைத் தளபதி, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மற்றும் பலர் கலந்து கொண்டதோடு, நிகழ்வின் ஆரம்பமாக சமாதானப் புறாக்களையும் வானில் பறக்க விட்டனர். இப்பயிற்சிட் பாசறை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட புத்தசாசன அமைச்சரும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் படைத்துறை பிரதியமைச்சருமான இரட்ணசிறீ விக்கிரமநாயக்காவால் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா வானில் பறந்த சில நொடிகளில் கழுத்து முறிந்த நிலையில் இறந்துவீழ்ந்துள்ளது. (உ)

# வாய்ச்சவடால் விடும் ஜனாதிபதியின் போலி முகத்தை வெளிக்கொணர்வோம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சில நாட்களுக்கு முன்னர் மேற்கொண்ட கலந்துரையாடல் ஒரு கண்



துடைப்பு நடவடிக்கை என்று தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்அடைக்கலநாதன் தொிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சனியன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமா தானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தமை தொடர்பாக இவ்வாறு கருத்துக் கூறியுள்ளார் செல்வம் அடைக்கலநாதன்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி சந்திரிகாவின் ஒவ்வொரு செயற்பாடுகளும் தனது ஆட்சியை நிலைநிறுத்துவதை இலக்காகக் கொண்டது. சில நாட்களுக்கு முன்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த இவர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒப்படைக்கப்படும் என்றும், மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

அவர் அவ்வாறு தெரிவித்த மறுநாளே அவரது கூட்டுக்கட்சியான ஜே.வி.பி. அக்கருத்துக்கு பலத்த எதிர்ப்பினை வெளியிட்டதுடன், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற பெயரில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான தீவிர எதிர் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது.

எதிர்ககட்சிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளின் காரணமாக தனது கட்சியைக் காத்துக் கொள்ளும் நடவடிக்கையாகவே சந்திரிகா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கினார். மாகாண சபைத் தேர்தல் நிறைவு பெற்றதும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படத் தவறினால் சந்திரிகாவின் போலி முகத்தை நாம் வெளிக்கொணரவோம் என்று தெரிவித்தார். (உ)

# மிதிவெடி அபாயமுள்ள பகுதிகளில் மீளக் குடியமருமாறு நிர்ப்பந்தம்

(வவுனியா)

மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்தால் மட்டுமே மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படும் என அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் நிர்பந்தித்து வருகின்றன.

இதனால் மிதிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களிலும் தமது கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர்.

மிதிவெடிகளினால் ஏற்படும் பாதிப்புகள் சென்ற ஆண்டுகளை விடவும் இவ்வாண்டு அதிகரித்துள்ளதற்கு இதுவே காரணம் என தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி தெரிவித்துள்ளார்.

அழுத்தங்களை அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தொடர்ந்தும் மக்கள் மீது மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளோருக்கு மட்டுமே மீள் குடியமர்வுக் கொடுப்பனவு உதவிகள் வழங்கப்படும் என அரச மற்றும் தொண்டர் நிறுவனங்கள் நிர்ப்பந்தித்து வருகின்றமை கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப பிரதேச மக்களுக்கு பொருததமற்றது.

ஏனெனில் கடந்தகால போர் நடவடிக்கைகளால் இப்பிரதேசத்தில் ஏராளமான பகுதிகள் வெடி பொருட்கள் அபாயம் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன.

எனவே, தமிழர் தாயகப்பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு இத்தகைய நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்படக் கூடாது.

இவவாறு கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட நிர்பந்தங்களால் ஏராளமான மக்கள் வெடி விபத்துக்களுக்கு இலக்காகிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிர்ப்பந்தங்களுக்கு எதிராக மனித உரிமைகளைப் பேணும் அமைப்புக்களிடம் முறையிட்டு பரிகாரம் தேடவுள்ளோம்.

அததுடன், கொடுப்பனவுகளை எதிர்பார்த்து வெடிபொருள் அபாயமுள்ள பகுதிகளில் மீளக்குடியமரவோ அல்லது மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வெடிபொருட்களை தாமாக அகற்றவோ மக்கள் முற்படக்கூடாது எனவும் மேலும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(உ-4,64)

# இராசி பலன்

**15.06.2004**

**(ஆனி01, செவ்வாய்க்கிழமை)**

**திரியோதசி மு.இ. 10.24 வரை**

**கார்த்திகை பி.இ. 4.29 வரை**

**இராகுகாலம் 2.53-4.23 மணிவரை**

**சுபநேரம் 10.23-11.53 மணிவரை**

சித்தாமிர்தம். பிரதோச விரதம். கார்த்திகைவிரதம்

**மேடம்**
அமைதிக் குறைவு, திடீர் நன்மை, பண விரயம், முயற்சி தாமதம்.

**இடபம்**
பெரியோர் மதிப்பு, நல்ல முயற்சி, உற்சாகம், நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
பிரயாணம், கடின முயற்சி, காரிய தாமதம், வீண் மனஸ்தாபம்.

**கடகம்**
எடுத்த காரியம் கைகூடும், தொழில் விருத்தி, பெருமையடைதல், தனவரவு.

**சிங்கம்**
அதிகாரம், காரிய நன்மை, நண்பர்கள் உதவி, நல்ல செய்தி.

**கன்னி**
தந்தை வழி உறவு, பிரயாணம், நிர்ப்பந்திக்கப்படல், எதிர்பாராத செலவு.

**துலாம்**
வாகன பயம், வீண் பிரச்சினை, காரிய தடங்கல், எதிர்பாராத நன்மை.

**விருச்சிகம்**
உடல் நலம், உறவினர் உதவி, முயற்சி கைகூடும், நல்ல செய்தி.

**தனுசு**
ஆரோக்கிய நிலை, காரிய அனுகூலம், பிரயாண நன்மை, போசன நன்மை.

**மகரம்**
வியாபார விருத்தி, சொத்துக்களால் கவலை, காரிய தாமதம், சிறு வியாதி,

**கும்பம்**
மாதா சுகம், வேலையில் ஆர்வம், புதிய விடயம், முயற்சி தாமதம்.

**மீனம்**
கூட்டு முயற்சி, கீர்த்தி, சகோதரர் உதவி, போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# வேலை தேடிச் சென்ற பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஐக்கிய அரபு எமிரேற்றில் தஞ்சம் கோரியிருந்த 38 இலங்கைப்பணிப் பெண்கள் அண்மையில் நாடு திரும்பியுள்ளனர்.

சவூதி அரேபியாவில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த மேற்படி 38 பெண்களையும் அந்தத் தொழிற்சாலை உரிமையாளர் இடைநிறுத்தியிருந்ததின்ால் அவர்கள் "ஐக்கிய அரபு எமிரேறறில் தஞ்சம் அடைந்திருந்தார்கள்.

இதனையறிந்த இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சம்பந்தப்பட்ட 38 பேரையும் திருப்பி அழைத்துள்ளார்.

இதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிந்து வரும் இலங்கைப்பெண்களுக்கு உரிய சம்பளம் வழங்காது துன்புறுத்துதல், கொலை செய்தல் ஆகியன தொடர்பாக ஆராய்வதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தலைவர் மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்று அங்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-60,10)

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர் - குறள்

வலம்புரி

## பதிலளிக்க வேண்டியது துணைவேந்தரின் பொறுப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி சாரா ஊழியர்கள் நேற்றுமுதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் கல்வி நடவடிக்கைகள் யாவும் பாதிப்படைந்துள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இவ்வாறு அடிக்கடி வேலை நிறுத்தம் நடைபெறுவது தொடர் கதையாக இருப்பது குறித்துப் பொது மக்கள் விசனமும், விரக்தியும் கொண்டுள்ளனர்.

இத்தகைய வேலை நிறுத்தப் போராட்டங்கள் ஒரு நாட்டின் உயர் கல்விப் பீடமெனக் கருதப்படும் பல்கலைக் கழகங்களில் அடிக்கடி நடைபெறுவது சமூக நலனுக்கு நல்லதல்ல.

பல்கலைக் கழகங்கள் என்பன ஏனைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டியவை. மோசடிகள், ஊழல்கள்-துஷ்பிரயோகங்கள் என்பன அங்கு இடம் பெறுவதற்கு அறவே இடந்தரலாகாது. கல்வியாளர்களை உருவாக்குகின்ற ஓர் உயர் கலாபீடத்தில் மோசடிகளும் ஊழல்களும் தாராளமாகக் காணப்படுமாயின் அதனால் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகள் மிகவும் மோசமானதாகவேயிருக்கும்.

பல்கலைக் கழகத்தில் கற்கின்ற ஒரு மாணவன் முதல் வேந்தர் வரையான அனைவருக்கும் மக்கள் மதிப்பளிக்கின்றனர். எமது சமூக மையங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், துணைவேந்தர் ஆகியோர் கௌரவிக்கப்படுகின்றனர்.

இத்தகைய கௌரவிப்பு மக்களின் அறியாமையால் எழுந்தவையல்ல. பல்கலைக் கழக ஆசான்களை கௌரவிப்பது கல்வியை மதிப்பதற்கு ஒப்பானதென்ற வகையிலேயே அஃது இடம்பெறுகிறது.

இவ்வாறு கௌரவிப்புக்களைச் செய்கின்ற மக்கள் தாம் வழங்கிய கௌரவிப்பானது காத்திரமானதென உள்ளூர உவகை அடைகின்றனர்.

மக்களின் இத்தகைய உணர்நிலை, நின்று நிலைக்க வேண்டுமாயின் பல்கலைக் கழக நிர்வாகம், நேர்மை-நீதி-ஒழுங்கு என்ற வகையில் தனது செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால், அத்தகைய நிலைகளில் பல்கலைக் கழக நிர்வாகம் இல்லை என்பதை அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களே உரத்துக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தாம் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் தொடர்பாக, ஒரு விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்;

❁யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளரின் வெளிநாட்டுப் பயணத்தில் இடம் பெற்ற மோசடிக்கு நடவடிக்கை எடுக்காமை.

❁போதனை சாரா ஊழியரின் பணிகளை தனியார் மயப்படுத்தியமை.

❁துணை வேந்தரின் விடுதிக்கு காப்பாளர் நியமனம் விதி முறைக்கு முரணாக இடம் பெற்றமை.

❁சம்பளப்படி நிலுவையுடன் வழங்கப்படாமை.

❁சேவை மூப்பும், கல்வித் தகைமையும் கொண்டோரைப் புறக்கணித்து குற்றவாளியாகக் காணப்பட்ட, சேவை மூப்புக்குறைந்த ஒருவரை பிரதம பாதுகாப்பு அதிகாரியாக நியமித்தமை.

❁பல்கலைகழக ஊழியர் சிலருக்கு குற்றப்பத்திரம் வழங்கப்படாமல் தண்டனை வழங்கப்பட்டமை.

❁ஊழியர் இடர்கடன் மீளளிப்புத் தொகை, கடன் வழங்கலுக்கு மீளப் பயன்படுத்தாமை ஆகிய விடயங்களை முன்வைத்து அவற்றுக்குத் தீர்வு காணுப்படிகோரி இவ் வேலைநிறுத்தப் போராட்டம் தொடரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்டுள்ள இவ் வேலைநிறுத்தப் போராட்டமானது, அவர்கள் கடந்த காலங்களில் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்களில் இருந்து வித்தியாசமானது.

அதாவது, பல்கலைக் கழக ஊழியர்கள் நேற்று முதல் ஆரம்பித்துள்ள போராட்டம் பல்கலைக் கழக நிர்வாகத்தை தூய்மைப்படுத்துவதற்காக இருப்பதால், அதற்குப் பொது மக்கள், மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் ஆதரவும் உண்டெனக் கொள்ளலாம். எனவே ஊழியர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஒரு தெளிவான பதிலை பொது மக்களுக்கு வழங்குவது அவசியமாகும்.

# வடக்கு-கிழக்கில் நிவாரணம் வழங்கும் திட்டம் வழமை போல்

## புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படவில்லை. கடந்த அரசு, புனர்வாழ்வு புனரமைப்பு மீளக்குடியேற்றுகை அமைச்சின் கீழ் இயங்கிய மத்திய ஆலோசனைக் குழுவின் சிபாரிசுக்கமையவே செயற்பட்டதாக நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம். எஸ். ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கில் சுமார் 66 ஆயிரம் குடும்பங்களிற்கான நிவாரணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என வெளியாகிய செய்தி தொடர்பான உண்மை நிலையை அறிவிக்குமாறு ஜனாதிபதி மேற்படி அமைச்சிற்கு விடுத்த பணிப்புரை தொடர்பாகவே எம்.எஸ். ஜயசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சினால் ஏற்படுத்தப்பட்ட மத்திய ஆலோசனைக் குழுவின் சிபாரிசுக்கமைய 79 ஆயிரத்து 437 குடும்பங்களிற்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஒரு வருடகாலம் நிவாரணம் பெற்றவர்களாகக் கருதப்படுவர். இதன்படி 79 ஆயிரத்து 437 குடும்பங்களிற்குமான சமுர்த்தி நிவாரணத்திற்காக யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதனின் சிபார்சுக் கடிதமும் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி குடும்பங்களிற்கு 2004.02.01 முதல் நிவாரணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் சகல மக்களிற்கும் நிவாரணம் வழங்கப் போதுமான நிதி இல்லாத போதும் வடக்கில் சமுர்த்தி நிவாரணத் திட்டம் இன்றுவரை நடைமுறைப்படுத்தாமையினாலும் கடநத பெப்ரவரி மாதம் முதல் மேலும் 3 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை பெற்றுக்கொடுக்கவும் அனுமதி அளிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## 120 இலட்ச ரூபா செலவில் இரு பாடசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தில் போர் நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்த இரு பாடசாலைகள் சுமார் 120 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மட்டுவில் தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயம், மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலைவன் பாடசாலை ஆகிய இருபாடசாலைகளுமே புனரமைப்புச் செய்யப்படவுள்ளவையாகும்.

இவற்றின் வேலைகளை ஆரம்பிக்கவென கேள்விப்பத்திரங்கள் தற்போது கோரப்பட்டுள்ளதாக தெரியவருகிறன்றது. (உ-16)

## விசாரணைகளைத் துரிதப்படுத்த பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு 24 மணி நேரத்தினுள் அந்த முறைப்பாடு சம்பந்தமான விசாரணையை ஆரம்பிக்கும் திட்டம் ஒன்றை பொலிஸ திணைக்களம் விரைவில் அமுல்படுத்தவுள்ளது.

விசாரணைக்கென விசேட பொலிஸ் அதிகாரிகள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

பொலிஸாரிடம் தெரிவித்த முறைப்பாடுகள் சம்பந்தமாக உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படாதமையினால மிகமோசமான விளைவுகள் ஏற்படுவதாக பொது மக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே பொலிஸ் திணைக்களம் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த எண்ணியுள்ளது. (உ-60,10)

## மதுபானத்திற்கு அடிமையான மாணவர்களைப் பாதுகாக்க விசேட திட்டம் அமுலாகும்

(கொழும்பு)

சிகரெட்டுக்கள், மதுபானம், போதைப் பொருள் என்பவற்றினால் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் தாக்கங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கென விசேட திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு அறிமுகம் செய்யவுள்ளது.

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்திற்கு அபாயகரமான ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் தேசிய சபையும் உதவி வழங்க முன்வந்துள்ளது.

சுமித்திரியோ ஆபத்துக்கு உதவும் நண்பர்கள் சங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இந்தத் திட்டத்திற்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளன.

போதைப்பொருள், மதுபாவனை ஆகியவற்றினைத் தடுப்பதற்கான குழுவினர் நாடளாவிய ரீதியில் இந்தத் திட்டம் அமுலுக்கு இடப்படுவதை மேற்பார்வை செய்யவுள்ளார்கள். (உ-60,10)

## விமான விபத்தை ஆராய உக்ரேன் குழு வருகிறது

(கொழும்பு)

அணமையில் நீர்கொழும்பு களப்பில் வீழ்ந்து நொருங்கிய மிக- 27 ரக விமானத்தின் பாகங்களை ஆய்வுக்குட்படுத்துவதற்கென உக்ரேன் நாட்டிலிருந்து விசேட குழு ஒன்று வருகை தரவுள்ளது.

அடுத்த வாரமளவில் இலங்கைக்கு வருகைதரும் இக்குழுவினர் இவ் விமானத்தில் விபத்து ஏற்படக் காரணம் என்ன என்பது குறித்து ஆராயவுள்ளனர்.

மிக்-27 ரக விமானங்களை பல மணி நேரங்கள் பாதிப்புகள் எதுவும் இன்றி விண்ணில் வைத்திருப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்துவர் என விமானப்படைத் தளபதி எயார் மார்ஸ் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார். (உ-4,64)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒளிந்திருந்த வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தொடர்ந்து 5 நாட்களாக ஒளிந்திருந்த இரு வெளிநாட்டுப் பிரஜைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட இவ்விரு நபர்களிடமிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் பெருமளவு சிகரெட் வகைகளையும், செலூலர் தொலைபேசியின் உதிரிப்பாகங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த 9ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்றும், ஏன் 5 நாட்களாக விமான நிலையத்தில் ஒளிந்திருந்தார்கள்? என்பது குறித்துத் தாம் தீவிரமாக விசாரித்து வருவதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-61,10)

### தினசரி தியானம்

**விவேகச் சிந்தனைகள்**

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒருபோதும செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மன நிலைக்கு இதயம் ஒருவனை அழைத்துக்கொண்டு போகிறது.

சுவாமி விவேகானந்தர்.

## மட்டு. ரயில்வே ஊழியர்கள் ஆர்ப்பாட்டப் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ரயில்வே ஊழியர்கள் நேற்று மேற் கொண்ட ஆர்ப்பாட்டப் போராட்டம் காரணமாக மட்டக்களப்பு -கொழும்பிற்கு இடையான ரயில் போக்குவரத்து சுமார் 2 மணி நேரம் பாதிக்கப்பட்டது.

தற்காலிக நியமன அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட ரயில்வே ஊழியர்கள் தம்மை நிரந்தரமாக்கக் கோரியே இவ் ஆர்ப்பாட்டப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பிலுள்ள 33 ரயில் கடவைகளைச் சேர்ந்த 178 ஊழியர்கள் புகையிரதப் பாதையை வழிமறித்து மேற்கொண்ட இவ் ஆர்ப்பாட்டப் போராட்டத்தினால் வழமைக்கு மாறாக முதலாவது ரயில்சேவை காலை 9.30 மணியளவிலேயே ஆரம்பித்ததாக மட்டக்களப்பு ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார். (உ-4,64)



யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதிகளின் புனரமைப்புக்காக இலங்கை வங்கி ரூபா 350,000/- நன்கொடையாக அளித்துள்ளது மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி நவநீதன் அவர்களிடம் அதற்கான காசோலையை இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு.க.பாலசுப்பிரமணியம் அண்மையில் கையளித்தார்.

### இ.தொ.காவின் ஆதரவைப் பெற

# மேல் கொத்மலைத் திட்டத்தை கைவிட அரசாங்கம் தீர்மானம்?

(கொழும்பு)

மேல் கொத்மலைத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில் இத் திட்டத்தைப் பிற்போடுவது என உத்தியோக பூர்வமற்ற முடிபொன்றை அரசாங்கம் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

8பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இ.தொ.காவின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் வரையிலாவது இதனைத் தள்ளி வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இ.தொ.காவுடன் மீண்டும் சமரசம் ஏற்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பாகப் பல்வேறு அரசியல்வாதிகளுடனும் பேச்சுக்களை நடாத்தியுள்ளோம். கொத்மலைத் திட்டம் பிற்போடப்பட்டுள்ளதென வெளியாகிய செய்திகள் ஆதரமற்றவையென மின் சக்தி எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

இது பற்றிய அமைச்சரவையின் ஏற்றுக் கொள்ளும் அறிவிப்பு வெளியாகும் வரை இத்திட்டம் ஆரம்பமாகும் திகதிபற்றிக் கூற முடியாது. ஐ.தே.க அரசின் காலத்தில கொத்மலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இ.தொ.கா அரசில் இருந்து விலகிவிடப்போவதாக அச்சுறுத்தியிருந்ததைத் தொடர்ந்து ஐ.தே.க.அத்திட்டத்தை கைவிட்டிருந்ததென்றும் அவர் கூறினார்.

இதேவேளை, அரசாங்கம் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெறும் பொருட்டு இ.தொ.காவின் நிபந்தனைகளைத் தற்போது மீள்பரிசீலனை செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-6)

## பேரணியில் பங்கேற்போருக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் வியாழக் கிழமை நடைபெறவுள்ள கண்டனப்பேரணியில் பொது மக்கள் இலகுவாகக் கலந்து கொள்ளும் பொருட்டு அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேரணிக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று நேற்று மாலை 3 மணியளவில் ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.பிரதேச செயலாளர் ச.சிவஞானசேகரம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையடலில் யாழ்மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்,யாழ்ப்பாண அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன், எழுச்சிப் பேரவைத் தலைவரும் ப.நோ.கூ.சங்கத் தலைவருமான சூ.சிறில் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் யாழ்.பிரதேச மக்களை பேரணியில் பங்கேற்கும் வண்ணம் போக்குவரத்து வசதிகள் மற்றும் கிராமங்கள், நகரங்கள் தோறும் விழிப்பூட்டும் நிகழ்வுகள் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-19)

## மாவீரர் கில்லரியின் நினைவுக்கல் திரை நீக்கம் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடற்கரும்புலி லெப்.கேணல் கில்லரியின் நினைவுக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுப்பிற்பகல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது.

பாண்ட் வாத்திய இசையுடன் இராச வீதிச் சந்தியில் இருந்து கில்லரியின் உருவப் படம் ஊர்வலமாக துயிலும் இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டது.

அரசியல் துறை உறுப்பினர் யாழவன் தலைமையில் அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

ஈகச் சுடரினை மாவீரரின் தந்தை ஏற்றினார். மலர் மாலையினை மாவீரரின் தாயார் அணிவித்தார்.

கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுடரவன், நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர் சுதன் ஆகியோர் அஞ்சலி உரையினை நிகழ்த்தினர்.

மாலை 5.45 மணியளவில் மாவீரரின் நினைவுக்கல் அவரது பெற்றோரால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. நிகழ்வில் போராளிகள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். (த-43)

## உலக இரத்த தான தினம் நேற்று அனுஷ்டிப்பு

(கொழும்பு)

உலகில் முதன் முறையாக நேற்று உலக இரத்ததான தினம கொண்டாடப்பட்டுள்ளது. உலக இரத்ததான தினத்தின் நோக்கம் இரத்ததானம் செய்வதற்குப் பொது மக்களுக்கு ஊக்கம் கொடுப்பதாகும்.

மேற்படி விசேட தினத்தையொட்டி இரத்தானம் செய்து உயிர்களைக் காப்போம் என்னும் தலைப்பில் கொழும்பில் நேற்று ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

சுகாதார அமைச்சில் இருந்து காலை 9மணிக்கு ஆரம்பமாகிய இவ் ஊர்வலம் சுதந்திர சதுக்கம் வரை சென்றடைந்தது.

அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா, அமைச்சு அதிகாரிகள் உட்பட 200 செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். (த)

## மட்டக்களப்பில்..

கொண்டு கேட்டபோது நேற்றைய தேடுதல் நடவடிக்கை நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டதாகவும் இத்தகைய திடீர் தேடுதல் நடவடிக்கைகள் தொடருமென்றும் தெரிவித்துள்ளனர்.

இத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 200க்கும் மேற்பட்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் எட்டுக் குழுக்களாகப் பிரிந்து சட்டவிரோத ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று சல்லடை போட்டுத் தேடியபோதும் எவ்வித ஆயுதங்களோ, ஆயுதங்களுடன் தொடர்புடைய வேறு எந்தவிதமான சாதனங்களோ கைப்பற்றப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, நேற்றைய திடீர் சோதனை நடவடிக்கை மக்கள் மத்தியில் அச்சஉணர்வை ஏற்படுத்தியிருப்பதாகவும் தொடர்ந்தும இத்தகைய தேடுதல்கள் இடம்பெறுமா என்ற பீதியில் பொது மக்கள் இருப்பதாகவும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.(ம)

## இளம்..

பொலிஸ பொறுப்பதிகாரி எச்.எம்.ஜி. அசோக் கருத்துத் தெரிவிக்கையில, பிரஸ்தாப இளைஞர்கள் கைகலப்பில் ஈடுபட்ட நேரம் மது போதையில் இருந்துள்ளனர்.

தத்தமது குற்றங்களை இரு பகுதியினரும் ஒப்புக் கொண்டு சமாதானமாகச் செல்வதாகக் கூறிய போதும் பொது இடங்களில் மது பானம் அருந்தி குழப்பம் விளைவித்தமைக்காக மேலதிக விசாரணையின் பொருட்டு ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டதாக கூறினார்.(த-246)

## கிளிநொச்சியில்..

தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடுதலுக்கும் மேம்பாடுகளுக்குமான செயலகம் ஏற்பாடு செய்துள்ள இக் கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்து கொள்கிறார்.

இக் கலந்துரையாடலின் போது வடக்குக் கிழக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு மீள் கட்டுமானம் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (ம)

### சர்வதேசநாடுகளின் உயர்மட்ட மாநாடு

## வட- கிழக்கு புனரமைப்புகள் குறித்து கொழும்பில் நேற்று ஆராய்வு

(கொழும்பு)

யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மனிதாபிமான பணிகளை மேற்கொண்டு வரும் சர்வதேச நிறுவனங்களின் உயர்மட்ட மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு வெளிநாட்டு சர்வதேச நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற நிதியுதவிகளின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த பிரதேச மக்களுக்கு பயனளிக்கக் கூடிய சேவைகளை சிறந்த முறையில் வழங்குவது குறித்து நேற்றைய மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு பகுதிகளின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு சேவைகள் குறித்து புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளர் ஹரிம் பீரிஸ் இந்த மாநாட்டில் விளக்கமளித்துள்ளார்.

இந்த மாகாணங்களின் தற்போதைய நிலைமைகள் குறித்து வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் விளக்கமளித்துள்ளார். கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்திருக்கின்ற நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சில் இந்த மாநாடு நடைபெற்றுள்ளது. நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றதாக அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.ஐ.எஸ்.அஹமட் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய சர்வதேச அமைப்புக்களுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தின் மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (த)

## நிவாரணத்திற்கான விநியோகக் கட்டளை பெறுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் தமக்குரிய கடந்த பெப்ரவரி மாத உலர் உணவு நிவாரணத்திற்கான வழங்கல் கட்டளைகளை யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இன்று பெற்றுக் கொள்ளுமாறும், வழங்கல் கட்டளைகளைப் பெற்று ஒரு சில தினங்களில் நிவாரண விநியோகத்தை மேற்கொள்ளுமாறும் யாழ்.செயலகத் திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த)

## கரும்புலிகள் நினைவாக உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவாக, தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவு, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தீருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி போட்டியில் மருதங்கேணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றெட்றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. (த)

## கட்சித்...

நிலையியற் சட்டங்களில் திருத்தங்களை உரியகாலத்தில் செய்ய வேண்டுமென்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற சிறப்புரிமை தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்க வேண்டுமென்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார் (ம)

## நவீனரக...

பறிப்படும் இந்நிலையில் போர்க் கப்பலைக் கொள்வனவு செய்யும் இலங்கை அரசின் நடவடிக்கை பல்வேறு தரப்பினரையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இராணுவச் சமநிலையில் இவ் விவகாரம் பெரும் பாதிப்பையேற்படுத்துமெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ)


உ
சிவமயம்

தூய அன்னையின் 150வது
பிறந்தநாளை முன்னிட்டு
நடைபெற உள்ள நிகழ்வுகள்

15.06.2004
கோப்பாய். ஆசிரிய கலாசாலை
அதிபர் திரு.ஆ.ஸ்கந்தமூர்த்தி தலைமையில்
ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தர் சிறப்புரை நிகழ்த்துவார்.
நேரம்: காலை 9.00 மணிக்கு
விடயம்:சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்
காலை 11.00 மணி சுவாமி விவேகானந்தர் தமது திருப் பாதங்களை நாட்டிய பெருமைக்குரிய யாழ்.இந்துக் கல்லூரியில் சுவாமி விமூர்தானந்தரின் சிறப்புரை: அதிபர் திரு.அ.சிறிகுமரன் தலைமையில் நடைபெறும்.

காலை: 12.15 வைத்தீஸ்வராக் கல்லூரியில்
சுவாமி விமூர்தானந்தரின் உரை,
சுவாமி சோமானந்தர் உரை
அதிபர் திரு.N.வன்னியசிங்கம் தலைமை வகிப்பார்

16.06.2004 தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ரதம்-கிளிநொச்சிக்கு செல்ல அன்னை திருவருள் புரிந்துள்ளாள்.
வழிநெடுகில் உள்ள பாடசாலைகளில் நிகழ்வுகள்
மகாதேவ ஆச்சிரமத்தில் தங்குதல்

17.06.2004 காலையில் திருக்கோணமலைக்கு காலை தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ரதம் புறப்படும். இவ் நிகழ்வுகள் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவிக்கு காணிக்கையாக அர்ப்பணிக்கப்படும்.

செயலாளர், ஸ்ரீராமகிருஷ்ண சாரதா
ஆச்சிரமம்
பருத்தித்துறை

09.06.2004
[C-245]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.